www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

# NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

25 SEPTEMBER 2022 - SUNDAY | Pages - 11 | E Paper - # 008 / Y 01 / 2022

Web: WWW.NEWSPLUS.LK E-mail: editor@newsplus.lk

## ஜெனீவாவில் இலங்கை எதிர்நோக்கும் ஆபத்து

ஜெனீவா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக மேற்குலக நாடுகள் முன்வைத்துள்ள யோசனை தொடர்பான வாக்கெடுப்பில் இலங்கைக்கு 11 வாக்குகள் மட்டுமே கிடைக்கும் என ஜெனீவா ராஜதந்திர தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

மேலும் இலங்கைக்கு எதிராக 22 - 24 வாக்குகள் கிடைக்கும் வாய்ப்புள்ளதுடன் 12 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துக்கொள்ளாது எனவும் பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. மனித உரிமை பேரவையில் 47 நாடுகள் அங்கம் வகித்து வருகின்றன. இம்முறை அமெரிக்கா, கனடா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு 02 »»

இராணுவ எண்ணிக்கையை உடன் குறைக்கவும்

# சர்வதேச மனித உரிமைப் பேரவை இலங்கையிடம் கோரிக்கை!

பாதுகாப்பு செலவையும் குறைக்கவும் சிபாரிசு!



இராணுவப் படையிலிருக்கும் 2 இலட்சத்து 47 ஆயிரம் படையினரை பராமரிப்பதற்கு பெரும் செலவு ஏற்படுவதனால் உடனடியாக அத்தொகையை குறைக்குமாறு ஜெனீவாவில் இயங்கும் மனித உரிமை ஆணைக்குழு இலங்கைக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள நிலையில் இராணுவப் படையினருக்கு உணவு வழங்குவதற்கு 10 கோடி ரூபா வரை செலவாகும் நிலையில் இத்தொகையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை 02 »»

## பட்ஜெட்டை தோற்கடிக்க எதிர்க் கட்சிகள் வியூகம்

– ரிஹ்மி ஹக்கீம் –

நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ள வரவு செலவுத்திட்டத்தை தோற்கடித்து அவசரமான தேர்தல் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக எதிர்க்கட்சியின் பல பிரதான கட்சிகள் இரகசியமான பேச்சுவார்த்தைகளை 02 »»

## சீனாவில் இராணுவப் புரட்சி? ட்டுவிட்டர் செய்தியால் பரபரப்பு!

சீன ஜனாதிபதி பதவியில் இருந்தும், சீன மக்கள் விடுதலை ராணுவத்தின் (பிஎல்ஏ) தலைவர் பதவியில் இருந்தும் ஜி ஜின்பிங் நீக்கப்பட்டுள்ளார் என்று சமூக ஊடகங்களில் செய்திகள் உலா வருகின்றன.

எனினும், சீன அரசு இதை 02 »»

அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது இலங்கை அரசாங்கம்:



## ஐ.நா. வில் அமைச்சர் அலி சப்ரி உரை!

ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் இலங்கை எதிர்பார்க்கின்றது என வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

இலங்கை நேரப்படி இன்று (25) அதிகாலை 2.30 03 »»

## 13 சுயாதீன உறுப்பினர்களுக்காக அரசு பயப்படுவது ஏன்?

சஜித் பிரேமதாஸ கேள்வி



– ரிஹ்மி ஹக்கீம் –

சுயாதீனமான 13 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவிற்கு பாராளுமன்றத்தில் பேசும் சந்தர்ப்பம் பறிக்கப்பட்டுள்ளமை ஜனாதிபதியை நியமிக்கும் நடவடிக்கையில் மாறுபட்ட கருத்தை தெரிவித்ததாலா அல்லது பதின்மூன்று பேரைக் கண்டு 02 »»

முஸ்லிம் கலாசார கட்டட விவகாரம்:

## மு.கா. தலைவர் ஹக்கீம் ஜனாதிபதியுடன் பேச்சு



கொழும்பு 10 டி.பி. ஜாயா மாவத்தையில் இயங்கும் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் கட்டிடத்தின் 02 »»




சவூதி நிகழ்வில் ஞானசார தேரர்:

## சமூக ஊடகங்களில் கடும் கண்டனம்!



கொழும்பில் சவுதி அரேபியத் தூதுவராலயம் ஏற்பாடு செய்திருந்த சவுதி அரேபியாவின் 92ஆவது தேசிய தின 02 »»

## அரச ஊழியர்களின் ஆடை: நாளை வரும் சுற்றறிக்கை

அரச உத்தியோகத்தர்கள் கடமைக்கு வரும் போது

பொருத்தமான ஆடைகளை அணிவது தொடர்பில் புதிய சுற்றறிக்கையை வெளியிட பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாளைய தினம் (26) சுற்றறிக்கையை வெளியிடக்கூடியதாக இருக்கும் என பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி 02 »»

ஈரானை உலுக்கியுள்ள பெண்கள் போராட்டம்:

## 41 பேர் பலி: 700 பேர் கைது!

ஈரானில் நடைபெற்று வரும் போராட்டங்கள், அந்நாட்டின் 80 நகரங்களுக்குப் பரவியுள்ள நிலையில், கடுமையாக இதனைக் கையாள அதிகாரிகளுக்கு அதிபர் இப்ராகிம் ரைசி உத்தரவிட்டுள்ளார்.

இளம் பெண் ஒருவர் பொலிசாரின் காவலில் 02 »»




## நந்திக்கடல், நாயாறு, சாம்பல் தீவு பகுதிகள் வனப் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனம்

வடக்கில் நந்திக்கடல், நாயாறு மற்றும் கிழக்கில் சாம்பல் தீவு உள்ளிட்ட பகுதிகளை வனப் பாதுகாப்பு வலயங்களாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் 02 »»

Collaborate with...
SIYANE NEWS
www.siyanenews.com | facebook.com/Siyanemediacircle | twitter.com/SivaneNews | Siyane Media Circle
SIYANE MEDIA CIRCLE (PVT) LTD
No. 41, Kahatowita, Veyangoda.
SIYANE Media Circle
SIYANE MEDIA CIRCLE
KAHATOWITA
GA 00213489
மாற்றத்தை நோக்கிய பயணம்

## ஜெனீவாவில்...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

எதிராக முன்வைத்துள்ள யோசனைக்கு மேலதிகமாக மனித உரிமை ஆணையாளர் இலங்கை சம்பந்தமாக முன்வைத்துள்ள அறிக்கையிலும் கடுமையான நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பாதுகாப்பு செலவுகளை குறைத்தல், வடக்கு, கிழக்கில் இராணுவத்தை குறைத்தல், பொருளாதார குற்றங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் உட்பட பல பிரதான பரிந்துரைகள் அவற்றில் அடங்கும்.

ஜெனீவா மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான யோசனை சம்பந்தமான வாக்கெடுப்பு எதிர்வரும் 4 ஆம் மற்றும் 6 ஆம் திகதிகளுக்கு இடையில் ஒரு நாள் நடைபெறவுள்ளது.

## ஈரானை...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்ததையடுத்து அங்கு போராட்டங்கள் வலுத்து வருகிறது. பாதுகாப்புப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் பலியானோர் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது.

இந்நிலையில், ஐநா கூட்டத்தில் பங்கேற்றுவிட்டுத் திரும்பிய அதிபர் ரைசி, வழக்கமான போராட்டங்களை அனுமதிக்கும் அதே நேரத்தில் கலவரங்களை ஏற்க முடியாது எனத் தெரிவித்தார்.

ஈரானில் வன்முறையில் ஈடுபட்டதாக 60 பெண்கள் உட்பட 700 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 13 சுயாதீன...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

அரசாங்கம் பயப்படுவதால்தானா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

சர்வதேச ரீதியாகக் கூட பாரிய ஆபத்து ஏற்பட்டுள்ள வேளையில்,

பாராளுமன்றத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகளுக்குக் கூட பேச வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், அரசாங்கம் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் எதிர்பார்பது என்னவென்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

## சர்வதேச...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது ஜெனீவாவில் நடைபெற்றுவரும்ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு கூட்டத்தில் வின் அங்கத்தவர்கள் இலங்கை தொடர்பாக வெளியிட்ட சிபாரிசுகளில் இதுவுமொன்றாகும்.

அடுத்த ஆண்டில் இராணுவத்துக்கான செலவு 373 பில்லியனாகும். இது கடந்த ஆண்டை விட 14 வீதம் அதிகமாகும். அவுஸ்திரேலியா, கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், மலேசியா, ஜப்பான், ஆகிய நாடுகளை விட அதிகமான எண்ணிக்கையினர் இலங்கை இராணுவத்தில் இருப்பதாக ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே பாதுகாப்புப் படை மறுசீரமைக்கப்பட்டு பாதுகாப்புச் செலவு குறைக்கப்படவேண்டுமென மனித உரிமை ஆணைக்குழு சிபாரிசு செய்துள்ளது.

## மு.கா...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஒரு பகுதியை இந்து, கிறிஸ்தவ திணைக்களங்களுக்கு வழங்குவதற்கு எடுத்த தீர்மானம் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் தலைவர் ரிஸ்வி முப்தி தலைமையில் உலமா சபை முக்கியஸ்தர்கள் சிலர் ஹக்கீமின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து தான் இது குறித்து விரைவில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதாக ஹக்கீம் தெரிவித்ததாக ஜமீயத்துல் உலமாவின் உதவிச் செயலாளர் அஷ்ஷேக் எம்.எஸ். எம்.தாஸிம் தெரிவித்தார்.

ஒன்பது மாடிகளைக் கொண்ட வக்குப் இல்லமாகப் பயன்படுத்துவதற்கு இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டது. ஏற்கனவே மூன்று மாடிகள் மாத்திரமே பூரணமாக கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஏனைய வேலைகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாக முஸ்லிம் சமய திணைத்தளத்திற்குட்பட்ட பல நிறுவனங்கள் வேறு இடங்களிலேயே இயங்கி வருகின்றன.

இவ்வாறிருக்கையில், இந்த கட்டிடங்களை இந்து, கிறிஸ்தவ விவகார திணைக்களங்களுக்கு வழங்க எடுத்திருக்கும் முடிவு குறித்து முஸ்லிம் சமூகத்தில் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கட்டிடமானது முஸ்லிம் நாடுகளின் உதவியுடனேயே நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க இக்காணியை முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்திற்கு வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் இது தொடர்பாக முஸ்லிம் இயக்கங்களின் பிரதிநிதிகள் இன்று கொழும்பில் கூடி எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர். கம்பஹா மாவட்ட புத்திஜீவிகள் அமைப்பின் தலைவர் முஹம்மட் முஸம்மில் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

முன்னாள் சவுதி அரேபியத் தூதுவர் ஹூசைன் மொஹமட், அவூன் தலைமையில் என்ற வர வேண்டும்.முஸ்லிம் சமய விவகார திணைக்களத்தின் முன்னாள் இணைப்பாளர் அல்ஹாஜ் உவைன், முன்னாள் பரீட்சை ஆணையாளர் எம்.எம்.முஹம்மட் உட்பட பல முஸ்லிம் இயக்கங்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டதாக இக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்த முஸம்மில் தெரிவித்தார்.

## நந்திக்கடல்...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

விவசாயத்துறை மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிக்கையில்,

”திருகோணமலை மாவட்டத்தின் சாம்பல் தீவு, வடக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாறு, நந்திக்கடல் உள்ளிட்ட பிரதேசங்களே வனப் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மக்கள் மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக நாயாறு மற்றும் நந்திக்கடல் குளங்கள் மாசுபடுகின்றன. கழிவுகளால் அந்தக் குளங்கள் நிரம்பியுள்ளன. அந்தவகையில் சதுப்பு நிலங்கள் மற்றும் குளம் சார்ந்த உயிரினங்கள் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் மேற்படி பகுதிகளைப் பாதுகாக்கும் வகையில் நிலைமையை ஆய்வு செய்வதற்காக விசேட குழு ஒன்றை நியமிக்கவுள்ளோம்.

அந்தக் குழுவிடமிருந்து இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை பெற்றுக்கொள்ளப்படும்” - என்றார்.

## சமூக...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

நிகழ்விற்கு பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அழைக்கப்பட்டமை குறித்து சமூக ஊடகங்களில் பலத்த விமர்சனங்கள் எழுந்துள்ளன.

முஸ்லிம்கள் மட்டுமன்றி சிங்களவர்களும் இந்தச் செயற்பாட்டை கண்டித்து பதிவுகளை வெளியிட்டுள்ளனர். ஓரிருவர் இதனை ஆதரித்தும் பதிவுகளை வெளியிட்டுள்ளனர்.

சவுதி அரேபியாவின் புதிய தூதுவர் காலித் ஹமாவூட் நாஸா அல்சான் அல் ஹட்டானி தலைமையில் வெள்ளிக்கிழமை இரவு கொழும்பு சங்கிரில்லா ஹோட்டலில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாஸ ராஜபக்ஷ, சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுச நாணயக்கார, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் பதியுதீன் ஆகியோர் அழைக்கப்பட்ட விருந்தினர்களாக இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பொதுபலசேனாவின் செயலாளர் ஞானசார தேரர் தலைமையில் கலாநிதி திலந்த விதானகே உட்பட அமைப்பின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர். இவர்கள் தவிர கங்காராமை விஹாராதிபதியும் கலந்து கொண்டிருந்தார்.

தேரர்களுக்கு பிரதான மேசையில் ஆசனங்கள் போடப்பட்டு உயரிய கௌரவம் அளிக்கப்பட்டிருந்தது.

ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன் மற்றும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் தலைவர் ரிஸ்வி முப்தி, உதவிச் செயலாளர் எம்.எல்.எம்.தாஸிம் மௌலவி ஆகியோருக்கு வி.ஐ.பி.களுக்காக ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டும், அமராது பொது அமர்விலிருந்து உணவினை அருந்தினர்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மற்றும் ரிசாத் பதியுதீன் ஆகியோர் விருந்துபசாரத்தில் பங்குபற்றாது விலகிச் சென்றனர்.

இது தொடர்பில் ரவூப் ஹக்கீமிடம் கேட்ட போது தேரர் அமர்ந்து உண்ணும் மேசையில் நாம் சமாந்தரமாக எப்படி அமர்வது? அவர் எமது சமூகத்திற்குச் செய்த அநியாயங்களையெல்லாம் மதிக்காது அழைப்பு விடுத்துள்ளார்கள் என்று தெரிவித்து கேக் வெட்டும் நிகழ்வில் மட்டும் பங்குபற்றி விட்டு அங்கிருந்து வெளியேறினார்.

சற்று தாமதித்து வந்த ரிசாத் பதியுதீன், தூதுவருக்கு கைலாகு கொடுத்து விட்டு உடன் வெளியேறினார். சவூதி தூதுவரும், பிரதித் தூதுவரும் தேரர்களுக்கு உயர்ந்த கௌரவமளித்து புகைப்படங்களை எடுத்துக் கொண்டனர்.

வஹாபிசம், பயங்கரவாதம் என கடுமையாக விமர்சித்து இலங்கை வாழ் சிங்கள, முஸ்லிம் மக்களிடையே நீண்ட காலம் இருந்து வந்த ஒற்றுமையை சீர்குலைத்த ஒரு அமைப்பின் முக்கியஸ்தர் வந்திருக்கின்றார் என ஞானசார தேரைக் கண்ட பலரும் கூறினர்.

## ஈரானை...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சின் செயலாளர் திரு.எம்.எம். பி.கே.மாயாதுன்ன தெரிவித்தார்.

பெண்கள் அலுவலகங்களுக்குச் செல்லும் போது சேலை அல்லது அலுவலகத்திற்கு பொருத்தமான ஆடையொன்றை அணியலாம் என்று ஏற்கனவே சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

எனினும், சேலை உள்ளிட்ட ஆடைகளின் விலைகள் அதிகரித்துள்ளமையினால் இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சிலர் சுற்றறிக்கையின் முதல் பகுதியை மாத்திரம் பின்பற்றுவதாகவும், பொருத்தமான அலுவலக ஆடை என்றால் என்ன என்பதை மறந்து விட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சீனாவில்...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

உறுதி செய்யவில்லை.

இந்திய-சீன எல்லையில் இரு தரப்பு ராணுவத்துக்கும் இடையே மோதல் சூழல் ஏற்பட்டு, நீண்ட பேச்சுவார்த்தைக்குப் பின்னர், முக்கிய நிலைகளில் இருந்து சீன ராணுவம் பின்வாங்கியுள்ளது. இதனால், எல்லையில் பதற்றம் சற்று தணிந்துள்ளது.

சமீபத்தில் உஸ்பெகிஸ்தானின் சாமர்கண்ட் நகரில் நடைபெற்ற ஷ ாங்காய் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், இந்தியப் பிரதமர் மோடி, ரஷ்ய அதிபர் புதின் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், சீனாவின் மக்கள் விடுதலை ராணுவத் தலைவர் பதவியில் இருந்து ஜனாதிபதி ஜி ஜின்பிங் நீக்கப்பட்டு விட்டார் என்ற தகவல் சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவுகிறது. அதேபோல, சீன மக்கள் பலர் தங்கள் ட்விட்டரில் ”அதிபர் ஜி ஜின்பிங் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்” என்ற தகவலைப் பகிர்ந்துள்ளனர்.

பாஜக மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமியும் இந்த தகவலை தனது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

பிஎல்ஏ அமைப்பின் முழுக் கட்டுப்பாட்டில் ராணுவம் உள்ளதாகவும், சீனாவின் அதிபராக லீ கியாமிங் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீன ராணுவத்தின் வாகனங்கள் கடந்த 22-ம் தேதியே தலைநகர் பெய்ஜிங் நோக்கிச் செல்லத் தொடங்கின என்றும், ஹூவான்லாய் மாகாணத்திலிருந்து, ஹெபே மாகாணத்தின் ஜாங்கியாகோ நகர் வரை 80 கி.மீ. தொலைவுக்கு ராணுவ வாகனங்கள் அணிவகுத்து நிற்பதாகவும் கூறப் படுகிறது.

ஜெனிபர் ஜெங் என்பவர் தனது ட்விட்டர் பதிவில், ”சீனா கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், அதிபருமான ஜி ஜின்பிங்கை சீன மக்கள் விடுதலை ராணுவத் தலைவர் பதவியில் இருந்து நீக்கிவிட்டதால், அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவில் 2 மூத்த அமைச்சர்களுக்கு மரண தண்டனையும், 4 அதிகாரிகளுக்கு ஆயுள் தண்டனையும் இந்த வாரம் விதிக்கப்பட்டது. இவர்கள் சீன அதிபருக்கு எதிராக அரசியல் பிளவை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகிறது. இதனால், ஜி ஜின்பிங்குக்கு எதிராகச் செயல்படுபவர்கள், அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்ற தகவலை பரப்புவதாகக் கூறப்படுகிறது.

## பட்ஜெட்டை...
(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத முன்னிலை சோசலிசக் கட்சி மற்றும் போராட்டகாரர்கள் இந்த பேச்சுவார்த்தையில் கலந்துக்கொண்டுள்ளனர்.

ஆளும் கட்சியில் இருந்து வெளியேறி சுயாதீனமாக இயங்கும் பல எம்பிக்கள் எதிர்க்கட்சி வரிசைகளில் அமர்ந்துள்ளனர். மிக விரைவில் பாராளுமன்றத்தில் இருக்கும் அரசாங்கத்தின் பெரும்பான்மை பலத்தை குறைக்க போவதாக அவர்கள் கூறி வருகின்றனர்.

அதிகரிக்கும் வாழ்க்கை செலவு மற்றும் சமய வழிப்பாட்டு தலங்களின் மின் கட்டணங்கள் பெருமளவில் அதிகரித்துள்ளமை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு அடுத்த வாரம் ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



# மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் இயங்குகின்ற மாகாண சபைகள்

**சட்டவிரோதமானவை என்று தேசப்பிரிய விசனம்**

நாட்டில் பொதுமக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகளை முன்னெடுத்துச் செல்வது சட்டவிரோத செயலாகும் என்று முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டைப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எந்தவொரு அரச நிறுவனத்தையும் மக்கள் பிரதிநிதி ஒருவர் இல்லாமல் கொண்டு செல்வது குற்றமாகும். உள்ளூராட்சி சபைகள், தேர்தல் இன்றி ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களால் செயற்படுத்தப்படுவது, பொதுமக்களின் அடிப்படை உரிமை மீறலாகும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தநிலையில் கடந்த காலங்களில் தேர்தல் நடத்தப்படவில்லை என மக்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவை தூற்றினர்.

எனினும், நீதிமன்றத்துக்குச் சென்றதும், நாடாளுமன்றினால் குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

பழைய முறையில் அல்லது புதிய முறைமையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

மாகாண சபை முறைமை கொண்டு செல்ல வேண்டுமாயின் மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்" - என்றார்.

# கலவரத்தின் மூலம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது

**– நாமல் கூறுகின்றார்**

"தேசிய பாதுகாப்பு என்பது நாட்டு மக்களின் பாதுகாப்பாகும். அதனை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்குக் காணப்படுகிறது. எனவேதான் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. கலவரத்தை ஏற்படுத்தி, அதன் ஊடாக நாடாளுமன்றத்தைக் கைப்பற்றி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த எவரேனும் முயற்சிப்பார்களாயின் அந்த முயற்சி ஒருபோதும் வெற்றியளிக்காது."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"தேசிய சபை தொடர்பில் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடல்களை முன்னெடுத்து சபாநாயகர் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவானது மக்கள் மத்தியில் கீழ் மட்டத்திலிருந்து ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் சிறந்த அனுவபத்தைக் கொண்டுள்ள கட்சியாகும்." - என்றார்.

# நல்லூரில் தியாகி திலீபனை நினைவேந்தி உண்ணாவிரதம்



யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில், நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் அடையாள உண்ணாவிரதம் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது.

இந்த அடையாள உண்ணாவிரதம் இன்று மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

தியாக தீபத்தின் நினைவேந்தல் தமிழர் தாயகம் உள்ளிட்ட தரணியெங்கும் நடைபெற்று வரும் நிலையில் - நாளை திங்கட்கிழமை இறுதி நாள் நிகழ்வு இடம்பெறவுள்ள நிலையில் இன்று நல்லூரில் திலீபனின் நினைவிடத்தில் அடையாள உண்ணாவிரத்தில் பலர் இருக்கின்றார்கள்.

அதேவேளை, நாளை திங்கட்கிழமை பல பாகங்களில் இருந்தும் ஊர்திகள் நல்லூருக்குப் பவனி வர இருக்கின்றன. அனைத்து ஊர்திகளும் காலை 10 மணிக்கு முன்பதாக நல்லூர் தியாக தீபம் திலீபனுடைய நினைவாலயத்தை வந்தடையும்.

தியாக தீபம் திலீபன் உயிர் பிரிந்த காலை 10.48 மணிக்கு மலரஞ்சலி இடம்பெறவுள்ளது.

## ஐ.நா.வில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மணியளவில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 77 ஆவது அமர்வில் உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வளரும் நாடுகள் மற்றும் அவற்றின் பொருளாதாரங்கள் மிகுந்த ஆபத்தில் உள்ளன. அரசுகள் நிதிச் சரிவை எதிர்கொள்ளும் போது போதுமான மூலதனத்துக்கான அணுகல் இல்லாததால், மக்கள் அதிகரித்து வரும் வறுமையை எதிர்கொள்கின்றனர். வேலையின்மை, பசி மற்றும் கல்வி சீர்குலைவு ஏற்படுகின்றன.

எமது நாடு அரசியல், சமூக மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காகச் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் கோரி நிற்கின்றது.

பொருளாதார சீர்திருத்தங்கள் மூலம் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர்கள் அளவிலான புரிதலை எட்டியதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

இலங்கை எதிர்கொள்ளும் வெளி மற்றும் உள் சவால்கள் அரசியல், சமூக மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது.

கருத்துச் சுதந்திரம் புனிதமானது, சட்டத்தின் வரம்புகளுக்குள் செயற்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் கொரோனாத் தொற்றுநோய் நாட்டின் பொருளாதாரத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

ஒரு தீவு தேசமாக, கடல்களில் ஏற்படும் மாசுபாடு மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கம் குறித்து நாங்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம்.

இலங்கை உயர் மனித அபிவிருத்திப் பிரிவில் 191 நாடுகளில் 73 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இலங்கை பல தசாப்தங்களாகப் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் மற்றும் தீவிர சித்தாந்தங்களை எதிர்ப்பதற்குச் சட்டமியற்றும் நடவடிக்கைகளும் மற்றும் சட்டத்தை அமுல்படுத்தும் பொறிமுறைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்குப் பங்களிக்கும் வகையில், அமைதி காக்கும் நடவடிக்கைகளில் இலங்கை தனது பங்களிப்பை அதிகரிக்க எதிர்பார்த்துள்ளது" - என்றார்.


# MEDIA DIRECTORY – 2022

வீட்டிலிருந்தவாறே தபால் மூலம் பெறுங்கள்!




Details of President, President, Parliament, Ministeries, Parliament Members, Provincial Council, Local Authorities, Political Parties, Foreign Mission in Sri Lanka, Honorary Consular Corps, International Organizations, Defence, Religious & Cultural Bodies, Universities, Media Orgazina-tions, Newspaper, Radios, Televisions, SLMMF Members

**Price: 1,100/-** (Book 900/- + Postal 200/-)

Sri Laka Muslim Media Forum
BOC, Lake House Branch, A/C No: 3268511

1,100 ரூபா பணத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் வங்கி கணக்கில் வைப்பிலிட்டு, பற்றுச்சீட்டை 0772612288 இலக்கத்துக்கு WhatsApp அனுப்புங்கள்.



# அரங்கம்

## மகாராணியின் முடிசூடு விழாவில் டட்லி சேனாநாயக்காவை கோபமூட்டிய குதிரைச் சவாரி!

**எலிசபத் மகாராணியின் இறுதிக் கிரியைக்கு சொந்தச் செலவில் சென்ற மைத்திரி**

எலிசபெத் மகாராணியின் இறுதிக் கிரியைககள் லண்டனில் பல கிரியைகளை உள்ளடக்கிய சமயக் கிரியை திங்களன்று நடைபெற்றது. உலக நாடுகளில் பெரும் தொகையான மக்களுக்கு மரணச் சடங்கு இடம்பெறுவதனை தொலைக்காட்சி மூலம் பார்க்கக் கிடைத்தது.

இறுதிக் கிரியைகள் ஏற்கனவே வடிவமைக்கப்பட்டிருந்த முறையிலே நடைபெற்றது. இந்த இறுதிக் கிரியையில் இலங்கை சார்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், அவரது துணைவி பேராசிரியர் மைத்திரி சிறிசேனவும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் தூதுக்குழு எட்டுப் பேரைக் கொண்ட இருந்தது. நாடு உள்ள நெருக்கடியில் எட்டுப்பேர் போக வேண்டுமா என்ற கேள்வி அரசியல் களத்தில் எழுப்பப்பட்டது. ஜனாதிபதி ஊடகப் பிரிவு இதற்குப் பதிலளித்து ஜனாதிபதியின் குழுவில் மூன்று பேரே அரச செலவில் சென்றதாகத் தெரிவித்தது. பேராசிரியர் தனது சொந்தச் செலவிலேயே விமான டிக்கெட்டைப் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. ஜனாதிபதியுடன் அவரது பிரத்தியேகச் செயலாளர் சென்றா பெரேரா மற்றும் சர்வதேச உறவுகளுக்கான பணிப்பாளர் தினேஷ் கொலம்பகே ஆகியோர் மட்டுமே இடம்பெற்றதாக ஜனாதிபதி அலுவலகம் விளக்கமளித்தது. காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் அலோசகரும் ஐக்கிய தேசியக் கட்சி பிரதித் தலைவருமான ருவன் விஜயவர்தன தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு லண்டன் சென்றிருந்த போதே லண்டன் இலங்கை தூதுவராலயம் ஏற்பாடு செய்திருந்த புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர் சார்பில் பங்கு பற்றியுள்ளார். மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி உலகத் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு புதிய மன்னர் சார்ல்ஸை சந்தித்து உரையாடி வாழ்த்தும் தெரிவித்தார். புசிங்ஹாம் மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

லண்டன் தூதுவராலயம் ஏற்பாடு செய்திருந்த புலம் பெயர்ந்த இலங்கையர்களுடனான சந்திப்பு இடம்பெற்றது. புலம் பெயர்ந்து வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு இக்கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. நாடு உள்ள அவல நிலையை ஜனாதிபதி எடுத்துக் கூறியதோடு, வங்குரோத்து நிலையிலுள்ள நாட்டை மீட்பதற்கு சகல தரப்பினரும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் என்ற செய்தியை ஜனாதிபதி ரணில், புலம்பெயர் வாழ் இலங்கையர்களுக்கு தனது உரையில் வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளார்.

**பிரித்தானிய ராஜவம்ச வரலாற்றில் ரணிலின் பெயர்**

ஜனாதிபதியின் இந்த விஜயம் பிரித்தானிய அரச பரம்பரை வரலாற்றில் பதிவாகிறது. 1956ஆம் ஆண்டு மகாராணியின் முடிசூட்டு வைபவத்துக்கு முன்னாள் பிரதமர் டட்லி சேனாநாயக்கவுடன் பிரிடிக்ஸ் குமாரியின் பெற்றார் கலந்து கொண்டுள்ளார். அப்போதைய பிரதமருடன் ரணில் விக்கிரமசிங்கவின் தந்தை எஸ்மெண்ட் விக்கிரமசிங்கவும், தாயாரான மாலினி விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டனர். ஆந்த முடிசூட்டு விழாவின்போது இடம்பெற்ற சுவாரஷ்யமான சம்பவமொன்றை ஜனாதிபதி ஜனாதிபதி அலுவலக அதிகாரிகளுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

நிகழ்வில் கலந்து கொண்ட இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கு பாகிஸ்தான் அரச தலைவரையும் அழைத்துச் செல்வதற்காக புறம்பாக குதிரை வண்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன என்றும் டட்லி சேனாநாயக்கவுக்கு டொங்கோ நாட்டின் பெண் பிரதமருடனாகும். இது பிரதமருக்கு பெருங்கோபத்தை ஏற்படுத்தியது. உயரமான பெண் பிரதமருடன் தான் போகமாட்டேன் என்று கூறி பிரதமர் இந்த ஏற்பாட்டை நிராகரித்தார். அப்போதைய ஜனாதிபதியின் தந்தை எஸ்மெண்ட் விக்கிரமசிங்க தலையிட்டு தனி குதிரைச் சவாரி ஏற்பாடு செய்திருந்தார்.

**ரூபாவின் பெறுமதி இழப்பு உலகின் 3ஆம் இடத்தில் இலங்கை**

நாடு எதிர்நோக்கிவரும் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கையின் ரூபாவின் பெருமதியை டொலருடன் ஒப்பிடும்போது மதிப்பிழந்து மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. இலங்கை ரூபா பெறுமதியை இழப்பதில் சிம்பாவே டொலர் மற்றும் கியூவின் பேஸோ நாயணத்திற்கு அடுத்த மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. அமெரிக்க ஜோன் ஹொப்சின்ஸ் பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞானப் பேராசிரியர் ஸ்டிவ் ஹன்சு விடுத்துள்ள புதிய அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தாண்டில் சிம்பாவேயின் டொலர் 73.33% தரம் இறங்கியுள்ளது. கியூபாவின் நாணயமான பேசோவா 57.65மூத்தால் பெறுமதியை இழந்துள்ள. அமெரிக்க டொலருக்கு சமாந்தரமாக இவ்வாண்டில் மட்டும் இலங்கை ரூபா 47.79% வீததத்தால் பெறுமதியை இழந்துள்ளது.

**மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக போராட்டம் நடத்தும் மதத் தலைவர்கள்**

அரசாங்கம் கடந்த மாதம் முதல் மின்சாரக் கட்டணத்தை பன்மடங்கில் அதிகரித்துள்ளது. இதனால் சாதாரண பொதுமக்கள் பெரும் பாதிப்புள்ளாகியுள்ளனர். அதேநேரம் சமய வழிபாட்டுத் தளங்களும் அதிகரித்து வரும் மின்கட்டணத்தை குறைக்குமாறு வேண்டுகோள் விடுத்து வருகின்றன. ஓமல்பே சோபித தேரர் சமயத் தலைவர்கள் பக்கத்திலிருந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார். மின்சகதி எரிபொருள் அமைச்சர் காஞ்சா விஜேசேகர இது தொடர்பாக விடுத்த அறிக்கை ஒன்று சமயத் தலைவர்களை அவமதித்ததாக கூறப்படுகின்றது.

மின்கட்டணம் அதிகமாயின் சோலர் மூலம் மின்சாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். நாட்டிலுள்ள 48000 விஹாரைகளுக்கும், ஆயிரக்கணக்கிலான இந்துக் கோயில்கள், பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ ஆலயங்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு சூரிய ஒளி பவுல்களைப் பொறுத்தும் திட்டமொன்றை அமுல்படுத்த முடியும் என்றும், இதற்கு ளிநாட்டு உதவிகளைப் பெற முடியுமென்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மின் கட்டண உயர்வினை ஆட்சேபித்து விஹாரைகளில் மின்குமிழ்களை போடாது இரவு நேரங்களில் இருளில் வைப்பதற்கு மகாசங்கத்தினர் தீர்மானம் எடுத்துள்ளனர். இத்தீர்மானத்தை இலங்கை பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு வரவேற்றுள்ளது. அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க இது பற்றித் தெரிவிக்கையில் குறைந்த பயன்பாடுள்ள விஹாரைகளை உரிய நேரத்தின் மின் கட்டணத்தை செலுத்துவமாகக் குறிப்பிட்டுள்ளார். கூடுதலான மின்சாரத்தை பயன்படுத்தும் விஹாரைகள் அநேகமானவை கட்டணத்தை செலுத்துவதற்கு தாமதிப்பதாகத் தெரிவித்த அவர், மின்கட்டணத்தை அதிகரித்த மின்சார சபையின் இருப்பினைப் பாதுகாப்பதற்கும் மக்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்குமே என்றும் தெரிவித்தார்.

**நிலக்கரி கிடைக்காவிடின் நாடு 12 மணி நேரம் இருளில்**

அதேநேரம் நிலக்கரியை பெற்றுக் கொள்வதற்கான 23ஆம் திகதி சமர்ப்பிக்காவிடின் மீண்டும் நாளொன்றுக்கு 8 மதித்தியாலம் முதல் 12 மணித்திலாயம் வரை மின்சாரத்தை துண்டிக்க வேண்டும் என்று பொதுமடக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்னாயக்க தெரிவித்துள்ளார். தற்போது கையிஜலிருப்பில் ள்ள நிலக்கரி ஒக்டோபர் 28ஆம் திகதி வரையே போதுமானது. துற்போது கையிருப்பில் 120000 தொன்னே உள்ளது. நிலக்கரி இல்லாவிடின் 900 மெகாவோட்ஸ் மின்சாரத்தை தேசிய மின்சாரத் தொகுதி இழந்து விடுகின்றது என்று தெரிவத்துள்ள அவர், நாட்டில் நிலக்கரி மூலம் 35மூ உற்பத்தியாகின்றது என்றும் கூறினார். இந்த நிலைமையிலிருந்து மீட்சி பெற ைந்து நாட்களுக்கு ஒருமுறை நிலக்கரி கப்பலொன்று வரவேண்டும். அதற்கு 21 மில்லியன் டொலர் தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

**பொருளாதார குற்றம் புரிந்த அமைச்சர்களுக்கு பயணிக்கத் தடை**

ஜெனீவாவில் தற்போது மனித உரிமை மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதில் இலங்கைக்கு எதிரான பாரதூரமான ஒரு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஜப்பான், பிரித்தானியா, கனடா, ஐரோப்பா, நியூசிலாந்து, உட்பட ஏழு நாடுகள் இணைந்து இப்பிரேரணையை சமர்ப்பித்துள்ளது.

கடந்த வாரம் மனித உரிமை ஆணையாளர் மிச்சல் பசெஸ் இலங்கைகக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். இதில் இலங்கையில் பொருளாதார குற்றங்களைச் செய்தவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரகலய மண்ணில் மீண்டும் அணி திரண்ட அரசியல் செயற்பாட்டாளர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் ஒன்றிணைந்து போராட்டம் ஒன்றை நடத்தி வருகின்றனர். தமிழர் கூட்டமைப்பு, வடக்குக் கிழக்கெங்கிலும் திரட்டிய கையொப்பத்துக்கு மேலதிகமாக காலிமுகத்திடலில் கடந்த 22ஆம் திகதி கையொப்பம் திரட்டும் நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த கையொப்பமிடும் இடத்தை பொலிஸார் சுற்றி வளைத்த போது மோதல் எதுவும் ஏற்படமாட்டாது என வாக்குறுதியளித்த பின் பொலிஸார் தேவையான அனுமதியை வழங்கினார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ரவூப் ஹக்கீம், சாணக்கியன் ராசமாணிக்கம் உட்பட எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும் இணைந்திருந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசந்துறை வரை தமது இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதாக சாணக்கியன் தெரிவித்தார். பொதுஜன பெரமுன தவிர்ந்த நாட்டின் அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை உடன் ரத்துச் செய்ய வேண்டும் என்பதே தமது கோரிக்கை என சாணக்கியன் தெரிவித்தார். அரகலய போராட்டத்திற்குப் பிறகு காலிமுகத்திடல் மீண்டும் சுறுசுறுப்புப் பெற்ற நாளாக இந்தப் போராட்டம் மாற்றியது. பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, முஜிபுர் ரஹ்மான் உட்பட பல எம்.பிக்கள் இங்கு கூடியிருந்தனர்.



**தன்வீட்டில் பணிபுரிந்த பணிப்பெண் பற்றி சவூதி தூதுவர் பிரதமரிடம் கூறியது**

இலங்கையின் சவூதி அரேபியத் தூதுவராக சவூதி வெளிவிவகாரச் சேவையைச் சேர்ந்த காலித் பின் ஹமூத் நஸீர் அல் தஸாம் அல் சுல்தானி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நியமனப் பத்திரத்தை கையளித்து இரு வாரங்களுக்கு முன் பதவியேற்றார். இந்த நியமனத்தை அவசர அவசரமாக மேற்கொள்ளவேண்டியேற்பட்டது இந்த வாரம் 23ஆம் திகதி இடம்பெற்ற சவூதி அரேபிய தேசிய தினத்தை முன்னிட்டாகும். கடந்த வாரம் பிரதமர் தினேஷ் குணவர்தனவே மரியாதைக்குரிய சந்திப்பொன்றை மேற்கொண்டார். இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணி நேரமாக இடம்பெற்றது. தூதுவர் தனது வீட்டில் பணிப்பெண்ணாக இருந்தது இலங்கைப் பெண்மனி. அவரால் இலங்கை பற்றிய கூடுதலான அக்கறை எனக்கு ஏற்பட்டது என்று தூதுவர் தெரிவித்தார். இலங்கை எதிர்நோக்கியுள்ள நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு சவூதியிலிருந்து கூடுதலான உதவிகளைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதாக பிரதமரிடம் உறுதியளித்தார்.

நெருக்கடி நிலையிலிருந்து இலங்கைக்கு உதவுமாறு பிரதமர் கேட்டதோடு இலங்கையில் முதலீடு செய்வதற்கு சவூதி அரேபியாவுக்கு அழைப்பும் விடுத்தார்.

முன்னாள் ஆளுனர் அலவிமௌலானாவின் புத்திரரான நஜீப் மௌலானா, பிரதமரின் செயலாளர் ஆகியோர் இச்சந்திப்பின் போது பிரசன்னமாகியிருந்தனர்.

**ஜோ பைடனைச் சந்தித்த அலி சப்ரி**

நியூயோர்க்கில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் செப்டெம்பர் மாத அமர்வில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி இப்போது நியூயோர்க் சென்றுள்ளார்.

24ஆம் திகதி அவர் அங்கு உரையாற்றினார். புல்வேறு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களைச் சந்தித்து இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தினார். ஐ.நாவின் ஏழாவது அமர்வில் கலந்து கொள்ளும் அமெரிக்க ஜனாதிபதி வழங்கும் இராப்போசன விருந்துபசாரத்தின் போதே அமைச்சர் ஜனாதிபதியைச் சந்தித்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2022 SEPTEMBER 25 - SUNDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

# போட்டிப் பரீட்சை நடாத்தி ஆசிரியர்களை தெரிவு செய்வது வரவேற்கத்தக்கது

ஆசிரியர்களை சேவைக்கு நேரடியாக உள்வாங்குவதனை நிறுத்தி போட்டிப் பரீட்சை நடாத்தி அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக் கொள்வதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

பாடசாலைகளுக்கு இருபதாயிம் பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கு கல்வியமைச்சு முன்பு தீர்மானம் எடுத்திருந்தது. இத்திட்டம் மூலம் வெற்றிடங்களின் அடிப்படையில் தேவையான ஆசிரியர்களை உரிய துறைகளுக்கு சேர்த்துக் கொள்ள முடியுமாக இருக்கும் என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த் தெரிவித்துள்ளார். ஒரு மாணவனின் எதிர்காலத்தை வகுப்பதில் ஆசிரியர்களே முக்கியம் வகிக்கின்றார்கள். எனவே திறமையான, தகுதிமிக்க ஆசிரியர்களை உள்வாங்க வேண்டும். முன்பு இருபதாயிரம் பட்டதாரிகளை ஆசிரியர்களாகச் சேர்த்து ஒரு வருடம் பயிற்சியின் பின்னர் பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கு அமைச்சு திட்டமிட்டிருந்தது. தேசிய கல்வி நிறுவகத்தில் ஒருவருட பயிற்சியை அளித்து பின்பும் பரீட்சை ஒன்றை நடாத்தியே ஆசிரியர்களை நியமிக்கத் திட்டமிட்டிருந்தது.

புதிய திட்டத்தின் கீழ் ஆசிரியர் சேவைக்கு மிகத் திறமையானவர்களே உள்வாங்கப்படுவர். சில காலத்துக்கு முன் பாராளுமன்ற உறுப்பினர்களின் பட்டியல் படியே ஆசிரியர்கள் சேர்க்கப்பட்டார்கள். இதனால் ஏற்பட்ட பாதிப்புக்களை உணர்ந்து கல்விக் கல்லூரிகள் மூலம் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டு பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டனர்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கல்வியமைச்சராகப் பணிபுரியும் போது இத்திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இக்கல்விக் கல்லூரியில் சுமார் 8000 ஆசிரியர்கள் வருடா வருடம் உருவாக்கப்படுகிறார்கள். மூன்று வருடப் பயிற்சியின் பின்னரே இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

கடந்த சில வருடங்களாக பட்டதாரிகள் எவ்வித போட்டிப் பரீட்சைகளுமின்றி கல்விச் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இதன் பிரதான நோக்கம் பட்டதாரிகளது பிரச்சினைகளைத் தீர்ப்பதாகும். கல்விப் போதிப்பதை விட பட்டதாரிகளது தொழில் பிரச்சினைகளைத் தீர்ப்பதே மாறி மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் செய்தன.

எமது பல்கலைக்கழக பாடநெறிகள் நாட்டில் தொழில் தேவைகளை நிறைவு செய்வதாக அமையவில்லை. இப்போது எமது பல்கலைக்கழகங்களில் உடன் தொழில் பெறக்கூடிய தொழில் சந்தைக்குத் தேவையானவர்களை உருவாக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டு கூட பல்கலைக்கழக மாண்ய ஆணைக்குழு நான்கு புதிய பாடங்களை அறிமுகப்படுத்தியது. நாட்டுக்கு மிகத் தேவையாகவுள்ள நிதிப் பொருளாதாரம், சங்கீத உருவாக்கம், தொழில்நுட்பம், ஆங்கில மொழியும் பிரயோக மொழியியலும், கம்பியூட்டர் விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் பொறியியல் என்பன அவையாகும். இவையே பல்கலைக்கழங்களில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. காலம் தாழ்த்தியேனும் இவ்வாறான பாடநெறிகளை அறிமுகப்படுத்துவது பாராட்டுக்குரியது. இதேநேரம் அடுத்தாண்டு புதிதாக தொழில்வாய்ப்புக்களை வழங்குவதில்லை என அரசு தீர்மானித்துள்ளது. இத்தீர்மானம் கல்வியமைச்சின் ஆசிரியர் சேர்ப்புக்குப் பாதிப்பாக அமைதல் கூடாது. இது குறித்து அரசு ஆழமாகச் சிந்தித்து வெற்றிடமுள்ள துறைகளுக்கு ஆசிரியர்களைச் சேர்க்க வேண்டும். வருடாந்தம் ஆயிரக்கணக்கானோர் கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதனால் அந்த வெற்றிடங்களையாவது நிரப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## கச்சா எண்ணெய் விலையில் வீழ்ச்சி

2022இல் மிகக் குறைந்த கச்சா எண்ணெய் விலை நேற்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க சந்தையில் நேற்று கச்சா எண்ணெய் விலை 7 சதவீதம் குறைந்துள்ளது.

அதன்படி நேற்று 86 டாலராக இருந்த ஒரு பேரல் கச்சா எண்ணெய் 78 டாலருக்கு விற்பனை செய்யப்பட்டது.

கடந்த டிசம்பர் மாதத்துக்குப் பிறகு இதுவே குறைந்த விலை என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சிக்கு காரணம் அமெரிக்காவில் பணவீக்கம் அதிகரிப்பதும், வரலாற்றில் இல்லாத அளவுக்கு வட்டி விகிதங்கள் அதிகரிப்பதும் தான் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கபடி போட்டியில் பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயம் இரண்டாமிடம்!



(நீலமேகம் பிரசாந்த்)

20வயதுக்கு உட்பட்ட மத்திய மாகாண கபடி போட்டியில் பூண்டு தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் இரண்டாம் இடத்தை சுவீகரித்துள்ளனர்.

மத்தியமாகாணத்தில் காணப்படும் பாடசாலைகள் பங்கு கொண்ட 20 வயதுக்கு உட்பட்ட கபடி போட்டியில் பூண்டுலோயா தமிழ் வித்தியாலயத்தை சேர்ந்த ஆண்கள் குழாமினரும்,பெண்கள் குழாமினரும் இரண்டாம் இடத்தை பெற்று சாதனை பெற்றுள்ளனர்.

## பாடசாலை மாணவியின் பெற்றோரினால் அமீர் அலிக்கு ஒலிவாங்கி அன்பளிப்பு



(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட மீராவோடை அமீர் அலி வித்தியாலயத்திற்கு ஒலிவாங்கி ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் முபாறக் அனூத் எனும் மாணவியின் பெற்றோர்களினால் இவ் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலையின் நலன் கருதி ஒலிவாங்கியை பெற்றுத் தந்த மாணவியின் பெற்றோருக்கு அதிபர் எம்.எம்.மஹ்ரூப் நன்றிகளை தெரிவித்துள்ளார்.

# நடிக்கிற ஆட்சிகளால் துடிக்கிற மக்கள்!

- கியாஸ் ஏ. புஹாரி



கழுத்துகளை இறுக நசுக்க முயலும் பொருளாதார நெருக்கடியை இலங்கையின் ஒவ்வொரு குடிமகனும் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றான். சுதந்திர இலங்கையின் வரலாற்றை புரட்டிப் பார்த்தால் என்றுமில்லாத திண்டாட்டத்தில் இன்று இலங்கை சிக்கியுள்ளது. இதனை அரசியலாக மாத்திரமே நம்மில் பலரும் உற்று நோக்குகின்றோம்.

ஆனால், இந்த நிலைமை உருவாக குறிப்பிட்ட சில காலங்களாக மாறி மாறி வந்த ஆட்சியாளர்களின் அலட்சிய போக்கும், அரச மோசடிகளுமே மிகப் பிரதான காரணிகள்.

பல கலவரங்கள், அனர்த்தங்கள், அரசியல் மாற்றங்கள, குழப்பங்கள் இப்படி பலதையும் இலங்கை சந்தித்த போதும் இவ்வாறனதொரு நிலைமையை என்றுமே சந்தித்ததில்லை. ஆனால், இன்று நாடு மீளுமா? என்று காண்போம் விடிவு? என ஏங்கித் தவிக்கும் நிலைக்கு நாம் அனைவரும் ஆளாக்கப்பட்டுவிட்டோம்.

1970 களில் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட மூடிய பொருளாதாரக் கொள்கையினால் இந் நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. இருப்பினும், அந்த நடைமுறையை அடுத்தடுத்து உருவான ஆட்சியாளர் திறன்பட திட்டமிட்டு செயற்பட்டிருந்தால் இன்று எதிர்பாராத அபிவிருத்தியை இலங்கை கண்டிருக்கும். துரதிஷ்டம் இன்று எதிர்பாராத வீழ்ச்சியிலும், திக்குமுக்காட்டத்திலும் நாடு சிக்கித் தவிக்கின்றது.

உளத் துய்மையில்லாதவர் களென்றாலும், நாட்டுப் பற்றும் இல்லாதவர்கள் இப்படி நாட்டை சூரையாடி விட்டார்களே! என்று மனம் தளும்பும் பலர் இருக்கின்றனர். ஆட்சிக்காக அடிவருடிகாளவும், அடாவடியாளர்களாவும், இனங்களையும் தூண்டிவிட்டு கூத்துப் போட்ட வர்க்கங்களாகவே கௌரவ உறுப்பினர்கள் செயற்பட்டனர். பாராளுமன்றத்தில் இன்றுள்ள மொத்த உறுப்பினர்களில் பெரும்பாலனவர்கள் அற்ப இலாபங்களுக்கு சோரம் போகிற மனோ நிலையில் இருப்பதனால்தான் இன்று நாடு பொருளாதார ரீதியில் கெட்டு குட்டிச் சுவராகிக் கொண்டிருக்கின்றது.

ஒரு காலகட்டத்தில் எமது வாழ்க்கை நடை ஓட்டத்தை ஒப்பிடுகையில் கல்வியில் முன்னேறிவந்த நாடு இலங்கை, சுகாதாரத்தில் முன்னேறி வந்த இலங்கை இப்படி பல இருந்தனர் பிற்பட்ட காலங்களில் குறுகிய மனப் பண்புகளால் இனவாத விஷ மிகள் கக்கிய எச்சங்கள் இன்று அத்தனையும் பின்தள்ளிச் சென்று கொண்டிருக்கின்றன.

இவைகளால் இவ்வாறானவர்கள் கண்ட இலாபங்கள் தான் என்ன? தனக்கும், மற்றவருக்கும் இல்லையெ மொத்தத்தில் பூச்சியத்தால் பெருக்கி விட்டு தற்போது உலக நாடுகளிடம் மண்டியிட்டுக் கொண்டிருக்கின்றோம். சாதாரணமாக இப்படி பொருளாதார நசுங்கு நிலை உருவாக ஆட்சியாளர் மாத்திரம் காரணமல்ல. மக்களாகிய நாமும் இந்த வீழ்ச்சியின் பங்களிகள்தான் எவ்வாறு தெரியுமா?

பாடசாலை செல்லும் முதல்நாளிலேயே பெற்றோரினால் ஊட்டப்படுகிற முதல் இலக்கு டாக்டர், “இன்ஜினியர்”, அரச தொழில் இப்படி பல... இதுவெறும் சமூகக் கண்துடைப்பே தவிர உண்மையான இலக்கு அல்ல என்பதை ஒரு மாணவன் தனது உயர் கல்விக் காலத்தில்தான் உணர்கிறான்.

ஏனென்றால், நாட்டில் முயற்சிக்கும், ஊக்கப்படுத்தலுக்கும், சுய தொழில் முன்னேற்றத்திற்கும் அங்கீகாரம் இல்லை. இது ஒருபுறமிருக்க “பல்கலைக்கழகம் சென்று வந்த ஒருவர் தங்களுக்குள் தாங்களாகவே வேலையற்ற பட்டதாரி” என பட்டத்தை சூட்டிக்கொண்டு, 35, 40 வயதைத் தாண்டும் வரை காத்திருப்பிலேயே காலம் கழியும். இது மட்டுமா? அரச தொழிலில் “பென்சன்” என்கிற ஒன்றுக்காகவும், நாட்காட்டிவரும் சிவப்பு நாட்களுக்கான விடுமுறைக்காகவும் அதே தூண்டிலில் தொங்கிக் கொண்டிருக்க நினைக்கும் நமது சமுதாயம் எப்படி நாடு முன்னேற்றத்தில் பங்கேற்க முடியும்.

இலங்கை பரப்பில் சிறிய நாடாகினும், வளத்தில் பெரும் பாக்கியம் பெற்ற செழிப்பான நாடு: ஆனால், இலங்கையர்களாகிய நாம் நேர விரயம், சோம்பேறித்தனம், முயலாமை, இயலாமை ஆகியவற்றில் முன்னனியில் நிற்கிறோம். இப்படியொரு நிலைமை மாறாத வரையில் எதுவும் சாத்தியமன்றே!

அதுபோல, இன்னுமொரு பக்கம் உள்ளது. அணித் தொடராக சில வியாபார உத்திகளின் பிரதிபலிப்பாக எத்தனையோ தொழிற்சாலைகள், நிறுவனங்கள், தோட்டங்கள், கைத்தொழிலில் நிறுவனங்களில் வெறும் சிறுதொகை கொடுப்பணவுகளால் ஊழியர்கள் நசுக்கப்படுகின்றமை. இதற்கு உதாரணமாக இற்றைக்கு எத்தனையோ வருடங்களாக வெறும் 1000 ரூபா சம்பள உயர்வுக்காக தோட்டத் தொழிலாளர்கள் மேற்கொள்கின்ற போராட்டங்கள் கொஞ்சநஞ்சமா? அதுபோல எத்தனையோ இருக்கின்றன.

ஊழியத்துக்கு தகுந்த ஊதயிங்களுமில்லை, உண்மையான அறிவுக்கு அரசாங்கத்தில் அங்கீகாரமுமில்லை. இது மாத்திரமல்ல எத்தனையோ பல நிறுவனங்களில் மோசடிகள், இலஞ்சம், ஊழல் இவைகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் சட்டத்திலுள்ள வலுக்களால் தப்பிக்கும் நிலைமை. இதுவே நாட்டின் தொடர்கதை...

உலகிற்கு உதாராணமாக வரக்கூடிய வளமிக்க நாடு இன்று உலகமே சிரிக்கும் நிலைக்கு மாறியுள்ளமையில் நமது நடவடிக்கைகளும் ஒரு காரணம். அற்ப இலாபங்களுக்காக ஆட்சியாளர்களை தெரிவு செய்தல், அரசியல்வாதிகளை குடைபிடித்து மகுடம் சூடி முடிசூடிவிட்டு பின்னர் அழுது புலம்புவது, பின்னர் கண்ட சூட்டில் மீண்டும் அவரைத் தோற்கடித்து விட்டு அவரைவிட தரமான அநியாயக்காரர் ஒருவரை ஆட்சியலேற்றுவது. இது நமது சமூகத்தின் விதியல்ல! நாமாகவே நமக்கு உருவாக்கிய சதி!!

இன்றுள்ள அரசியல் சில்லறை வித்தைகளை உணர்ந்து நாம் ஒவ்வொருவரும் “நமக்குள் நாமே சுய விசாரனை” செய்யாத வரை எந்த மாற்றமும் உருவாகாது. வெறுமெனே அறிக்கைகளாலும், தூங்கிக் கொண்டு கனவு கானும் சிந்தனைகளாலும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது.

உதாரணமாக பல இலங்கையர்களிடையே சிங்கப்பூர் மாதிரியின் மீதான ஆவேசம் சில தசாப்தங்களுக்கு முன்னிருந்து பேசப்படுகிறது. இலங்கை இன்று ஆசிய மையமாக அதிசயாக இருந்திருக்கக் கூடிய நிலையில், துரதிஸ்டவசமாக அழிந்து கலங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்த மனநிலையின் ஒரு பகுதியானது சிங்கப்பூரின் மறைந்த ஸ்தாபகத் தந்தை லீ குவான் யூ 1956 இல் தனது முதல் இலங்கை விஜயத்தைத் தொடர்ந்து இலங்கையின் முன்னேற்றத்தைப் போல சிங்கப்பூரை மாற்றியமைக்க வேண்டும் என உறுதி கொண்டுள்ளார் என்ற சம்பவமும், வாசகமும் நம்மில் நிறைய பேருக்கு பரீட்சையமானது.

ஆற்றல் மிக்க ஒரு நாட்டை லீகுவான் யூ பார்த்தது, இன்று துரதிர்ஷ்டவசமாக மோசமான தலைமை, தவறான நிர்வாகம் மற்றும் சமூக அமைதியின்மை ஆகியவற்றால் ஆற்றல் வீணடிக்கப்பட்டது.

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான இடைவெளி இப்போது பெரியதாக உள்ளது. சிங்கப்பூர் 5.6 மில்லியன் மக்களைக் கொண்டுள்ளது,

இது இலங்கையின் 21 மில்லியனை விட கால் பகுதிக்கு மேல் உள்ளது, ஆனால் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி சுமார் 293 பில்லியன் டொலர் - இலங்கையை விட மூன்றரை மடங்கு. ஒரு வளர்ந்த நாடாக சிங்கப்பூர் இப்போது திகழ்கிறது. அதிக கல்வியறிவு விகிதம் மற்றும் குறைந்த குழந்தை இறப்பு ஆகியவற்றை பதிவு செய்துள்ளது. இதற்கு நேர்மாறாக, இந்த அனைத்து நடவடிக்கைகளாலும் இலங்கை தவித்துக் கொண்டிருக்கிறது.

இலங்கையின் அபிலாஷைகள் தைரியமானவை, ஆனால் அடைய முடியாதவை.

இதற்கான முதற் காரணம் இனவாதம் எனும் விஷம். அன்று இலங்கையை அபிவிருத்தியில் உதாரணமாக எடுத்த சிங்கப்பூர் தங்கள் வெற்றிக் கு இட்ட முதலாது கடிவாளம் ”யார் ஒருவர் இனவாதம் பேசினாலும், உடனடியாக கைது செய்து உள்ளே போட்டனர்.” வலுவான இன சமத்தும் பேணப்பட்டது.

அதுதான் அந்த நாட்டின் வெற்றிக்கு முதல் வித்தாக அமைந்தது.

பின்னர் தொழில் முனையங்கள் ஊக்குவிக்கப்பட்டன. இப்படி இன்னோரண்ண செயற்பாடுகளால் அந் நாடு செயற்கை அழகுகளால் இன்று மிளிர்கிறது. ஆனால், இயற்கை அழகும் வளமும் கொண்ட இந்த இந்து சமுத்திரத்தின் முத்து சில கயவர்களின் எரி கண்களுக்குள் சிக்குண்டு தத்தளிக்கிறது. இலங்கையெனும் சபீட்சத்தின் ஒளி அனையாது, ஒருநாள் இலங்கை மீளும்! அதற்கு நம் ஒவ்வொருவரது சுய விசாரணைகளும் இன்றியமையதவைகள்.

'System Change" நிச்சயம் வர வேண்டும். முதலில் சேறு பிடித்த அரசியல் அழுக்குகள் சுத்திகரிக்கப்பட வேண்டும். உற்பத்தி ஊக்குவிப்புகள் விதைக்கப்பட வேண்டும், அரச, தனியர் நிறுவனங்கள் வினைத்திறனை ஊக்கப்படுத்தும் வகையில் அரசு பல்வேறு திட்டங்களை வகுக்க வேண்டும். இப்படி பல விடயங்கள் நடாந்தால் மட்டுமே நிறைவான அபிவிருத்தியை எட்டலாம்.

இங்கு அப்படியா உள்ளது. இன்றைக்கு ஒரு Circular நாளை இன்னொரு Circular, தொழில் முயற்சிகளை ஊக்குவிக்க அரச திட்டங்கள் வகுக்கப்பட்டாலும் அதிகாரிகளின் பொடுபோக்கு, வெறும் Paper Qualification னோடு நாற்காலியையும், மேசையையும் அலங்கரிக்கும் நடைமுறை, அடிப்படை அறிவுகள் இல்லாத பலர் அதிகாரக் கதிரைகளில் அமர்தல் இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

இவ்வாறான 'System' கள் எப்பபோது Change ஆகிறதோ அன்றுதான் முழுநாட்டுக்கும் விடுதலை!

***

## அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை - 2022





தெல்தோட்டை ஊடக மன்றமும், அருள்வாக்கி அப்துல் காதிர் கலை இலக்கியக் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த 2022ம் ஆண்டுக்கான அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை (24) தெல்தோட்டை, புலவர் மலையடிவாரத்தில் அமைந்துள்ள, கஃஎனசல்கொல்ல மத்திய கல்லூரிக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

“தெல்தோட்டை - புதியதோர் மாற்றத்தை நோக்கி” என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்த நினைவுப் பேருரை நிகழ்வில் கருப்பொருள் உரையினை கலாநிதி கலாநிதி அக்ஷ்க்ஷெய்க் ரவூப் ஸெய்ன் (நளீமி) அவர்கள் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வின் மற்றுமொரு முக்கிய அம்சமாக அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரை ஜனரஞ்சகப்படுத்தும் நோக்கில் 1965இல் புலவர் பிறந்த நூற்றாண்டு விழாவின் போது புலவர் பற்றிய சிறப்பிதழொன்றை வெளியீட்டமைக்காக தினகரன் தேசிய நாளிதழிற்கும், புலவர் இயற்கையெய்திய நூற்றாண்டினை அனுக்ஷ்டிக்கும் வகையில் 2018ம் ஆண்டு ஜூன் மாதம் ஞானம் சஞ்சிகையின் 217ஆவது இதழை புலவர் பற்றிய சிறப்பிதழாக வெளியிட்ட ஞானம் சஞ்சிகையின் இணை ஆசிரியர் வைத்தியர் ஞானம் ஞானசேகரன் அவர்களுக்கும், புலவர் பற்றிய சிறப்பிதழொன்றை வெளியிட்ட தென்னிந்தியாவின் இளம்பிறை எம். ஏ ரகுமான் அவர்களின் பிரதிநிதியாக வருகைத் தந்த ஊடகவியலாளர் கலாபூக்ஷணம் கண்டி ராமர் அவர்களுக்கும் தெல்தோட்டை ஊடக மன்றமானது, “அருள்வாக்கி நேசன்” விருது வழங்கி பாராட்டி கௌரவித்தது.

# இலங்கையிலுள்ள சிறுநீரக மாற்று சிகிச்சை நோயாளிகளுக்கு உறுப்பு செயலிழப்பை தடுக்க உதவும் உயிர்காக்கும் மருந்துகளை நன்கொடையாக வழங்கிய பாகிஸ்தான்!






இலங்கையிலுள்ள சிறுநீரக மாற்று சிகிச்சை நோயாளிகளுக்கு உறுப்பு செயலிழப்பைத் தடுக்க உதவும் உயிர்காக்கும் மருந்துகளை பாகிஸ்தான் நன்கொடையாக வழங்கியது.

அதற்கமைய இந்த நன்கொடை இலங்கையின் கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தினூடாக இலங்கை சுகாதார அமைச்சகத்திடம் “CCL Pharmaceuticals Pakistan” என்ற நிறுவனம் வழங்கியது.

இந்த நன்கொடையானது, இலங்கையின் தற்போதைய கடுமையான மருந்துப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு சிறுநீரக நோயாளர்களுக்கு தேவையான முக்கியமான மருந்துகளை வழங்குவதன் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு பாரிய உதவியாக இருக்கும்.

இந்த உதவியானது, அனைவருக்கும் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வைச் செயல்படுத்துவதற்கான CCLs ‘ஹேண்ட் இன் ஹேண்ட்’ ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்கு 2030 இன் கீழ் செயற்படுகின்றது.

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் மருந்து கையளிக்கப்பட்ட இந்நிகழ்வில் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) உமர் ஃபாரூக் பர்கி, ஊஊடு இன் வணிகத் தலைவர் சையத் உமைர் மரூஃப் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் உமர் ஃபாரூக் பர்கி கருத்துத் தெரிவிக்கையில்,

“பாகிஸ்தானின் அரசாங்கமும் தனியார் துறையும் எமது இலங்கை சகோதர சகோதரிகளுக்கு ஆதரவளிக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்யும்.

குறிப்பாக இந்த சவாலான நேரங்களில் இலங்கை மக்களுக்கு உயிர்காக்கும் மருந்துகளை வழங்குவதற்கு எங்களின் அழைப்புக்கு சாதகமாக பதிலளித்த CCL Pharmaceuticals ஐ நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம்” என்றார்.

இங்கு கருத்து வெளியிட்ட சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல,

“கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் மற்றும் ஊஊடு ”ாயசஅயஉநரவளையடள பாகிஸ்தானின் இத்தகைய முக்கியமான மருந்தை எமது மக்களுக்கு வழங்குவதற்கான ஆதரவை சுகாதார அமைச்சு அன்புடன் வரவேற்கிறது.

சிறுநீரகம் செயலிழந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் இது பெரிதும் உதவும். தற்போதைய பொருளாதார நிலைமையின் ஊஊடு இன் இந்த ஆதரவு இலங்கை மக்களுக்கு அத்தியாவசிய சுகாதார சேவையை வழங்குவதற்கு எங்களிடம் தரம் வாய்ந்த மருந்து உள்ளது என்பதை உறுதியளிக்கிறது” என்றார்.

15- 20% வரை உள்ள 400 க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு Tacgraf மிகவும் முக்கியமான ஒரு நோய்த்தடுப்பு மருந்து என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

# மகாராணியின் மறைவுக்கு இலங்கை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட அனுதாப பிரேரணையின்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உரை!

தாய்லாந்து, மியன்மார், கம்போடியா ஆகிய நாட்டுத் தலைவர்களுடன் இணைந்து மகாராணியின் முயற்சியில் 2500வது புத்த ஜயந்தி விழா நடத்தப்பட்டது என்பது பலரும் அறியாத உண்மை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் நேற்று பாராளுமன்றத்தில் நினைவு கூர்ந்தார்.

பிரித்தானிய மகாராணியின் மறைவுக்காக மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் மற்றும் அரச குடும்ப உறுப்பினர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இலங்கை பாராளுமன்றத்தில் இன்று (23) வெள்ளிக்கிழமை அனுதாப பிரேரணை சமர்பிக்கப்பட்டது. இதில் இணைந்து கொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஜனாதிபதியாக பதவியேற்றதை தொடர்ந்து எனக்கு கிடைத்த வாழ்த்து மடல்களில் இரண்டாம் எலிசபெத் மகாராணி அனுப்பிய வாழ்த்து மடல் மிகவும் விசேடமானது. அது அவரிடமிருந்து கிடைத்த இறுதி வாழ்த்து மடலாகும்.

மகாராணி அவருடைய கணவரின் மறைவுக்குப் பின்னர் மிகவும் பலவீனமடைந்தவராகவே இருந்தார். என்றாலும் இப்படியானதொரு திடீர் மறைவை நாம் யாரும் எதிர்ப்பார்த்திருக்கவில்லை. அவரது மறைவுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே பதவி விலகும் மற்றும் பதவியேற்கும் பிரித்தானிய பிரதமர்களுடன் அவரை தொலைக்காட்சியில் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது அவர் மிகவும்



சோர்வாக காணப்பட்டார்.

எது எப்படியோ முன்னாள் பிரதமர் போரிஸ் ஜொன்சன் மற்றும் லிஸ் ட்ரஸ் ஆகியோருடன் சுமார் அரை மணித்தியாலத்தை செலவு செய்தாலே அது யாராக இருந்தாலும் களைப்படைந்து விடுவார்கள். எனவே அது ஒன்றும் விசேடமானதல்ல. அதனைத்தொடர்ந்து அவரது மறைவுச் செய்தி எம் காதை எட்டியது. தற்போது அனைத்து இறுதிச் சடங்குகளும் நிறைவடைந்துள்ளன. அவரது மறைவை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கை, இங்கிலாந்து, பொதுநலவாய நாடுகள் மற்றும் உலகிற்கு இரண்டாம் எலிசபெத் மகாராணி செய்தவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாகும்.

சிலோனின் மகாராணியாக அவர் இருந்த காலப்பகுதியில் நாட்டில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. சிலோன் சிறிலங்காவானது. இவரது ஆட்சியின் கீழ் மிகச்சிறந்த அரசியல் தலைவர்கள் உருவானார்கள். தேர்தலில் 1956 இல் வெற்றிக்கண்டது. இனப்பிரச்சினை தோற்றம் பெற்றது. இலவசக் கல்வியைப் பெறும் புதிய தலைமுறையொன்று உருவானது. பொருளாதாரம் அரச கட்டுப்பாடுக்குள்ளானது. இரண்டு சதித்திட்டங்கள் மற்றும் தெற்கில் ஆயுத எழுச்சியின் ஆரம்பம் என்பன அவ்வாறான குறிப்பிட்டுக் கூறும்படி மாற்றங்களாகும்.

மகாராணி தீவிரமான கிறிஸ்தவராக இருந்த போதிலும் அவர் 1815 அம் ஆண்டின் கண்டி பிரகடனத்துக்கமைய பௌத்த மதத்தை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். நாட்டின் தலைவரென்ற வகையில் தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ் ஆகிய நாட்டு அரசர்கள் மற்றும் பர்மாவின் அப்போதைய ஜனாதிபதி ஆகியோருடன் இணைந்து 2500வது புத்த ஜயந்தியை கொண்டாட மகாராணி எடுத்த முயற்சி பலரும் அறியாதவொரு விடயமாகும்.

அவரது ஆட்சியின் இறுதியில் எமது நாடு குடியரசாக மாறியபோதும், இரண்டு விடயங்கள் மட்டும் இன்னும் தீர்க்கப்படாமலேயே உள்ளன. அதில் ஒன்று இனப்பிரச்சினையின் தோற்றம். இதனால் பாரிய எழுச்சிகள் உருவானது. எனினும் அதன் இறுதிக் கட்டம் இன்னும் தீர்வு காணப்படாமலேயே உள்ளது.

இரண்டாவது விடயம், நாட்டுக்கு பெயரளவு தலைவர் ஒருவர் மட்டுமே போதுமாக இருந்தால், ஏன் மகாராணியை வேண்டாம் என்று கூறினீர்கள்? அப்படியென்றால் பெயரளவு ஜனாதிபதி மட்டும் எதற்காக வேண்டும்? என்பதாகும்.

‘எத்த’ பத்திரிகையின் ஆசிரியர் மறைந்த சிறிவர்தன அவர்கள், சோசலிச நாடு உருவாகுவதற்கு அந்நாடு குடியரசாக வேண்டும் என்பதில்லை என்ற தொனியில் ஆசிரியர் தலையங்கமொன்றை எழுதியிருந்தார். அப்போதைய எதிர்க்கட்சி தலைவராக இருந்த ஜே.ஆர் ஜயவர்தன நாட்டுக்கு பெயரளவு ஜனாதிபதியொருவர் எதற்கு என்று கேள்வி எழுப்பினார். அக்கருத்துக்கு எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான ரணசிங்க பிரேமதாச ஆதரவு அளித்திருந்தார். அப்படியே நாட்டுக்கு ஜனாதிபதியொருவர் தேவையென்றால் அது பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி மாதிரியை ஒத்ததாக, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவே இருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். எனினும் அப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமலேயே உள்ளது.

இந்த நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாக வாக்குறுதியளித்தே இன்று பலரும் தேர்தலில் வெற்றி பெறுகின்றார்கள். எனினும் எவரும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. இலங்கைக்கு மட்டுமன்றி முழு உலகத்தின் மாற்றத்திற்கும் இரண்டாம் மகாராணி வழிவகுத்துள்ளார். அவர் மேற்குலகின் பலத்தை ஆசியாவுக்கும் ஆபிரிக்காவுக்கும் மாற்றீடு செய்தார்.

பிரித்தானிய சாம்ராஜ்ஜியம் தகர்த்தப்பட்டதை தொடர்ந்து, அது ஐரோப்பாவுடன் இணைந்து கொண்டது. தற்போது பிரித்தானியா, ஐரோப்பாவிலிருந்து விலகி உலகில் தனக்கென தனியொரு இடத்தை உருவாக்கி வருகின்றது.

பிரித்தானிய காலனித்துவத்தில் இரண்டாம் எலிசபெத் மகாராணி மிகவும் வித்தியாசமானவர். அவர் பிரித்தானிய காலனித்துவத்தின் தலைவியாக இருந்து, பின்னர் பொதுநலவாய நாடுகளின் தலைவியானவர். இந்த மாற்றம் மேற்குலகிற்கு மட்டுமன்றி உலகின் ஏனைய பகுதிகளுக்கும் பாரிய வெற்றியை ஈட்டித் தந்தது. மேற்குலகை உலகின் ஏனைய பகுதிகளோடு இணைத்ததன் மூலம் எமது காலத்தில் வாழ்ந்த பல்வேறு தலைவர்கள் பொதுநலவாய நாடுகளின் கீழ் மகாராணியுடன் இணைந்து செயற்பட்டதைக் காணமுடிந்தது.

சேர் வின்ஸ்டன் சர்ச்சில், டேம் மார்கரெட் தட்சர், பண்டித் ஜவஹர்லால் நேரு, சேர் ராபர்ட் மென்சிஸ், பியர் ட்ரூடோ, லெஸ்டர் பியர்சன், நெல்சன் மண்டேலா, கென்யாட்டாஈ கென்னத் கவுண்டா, நைரேரே, நக்ருமா, லீ குவான் யூ மற்றும் துங்கு அப்துல் ரஹ்மான் ஆகியோர் இவர்களுள் சிலராவர்.




# மட்டு. விவசாயிகளுக்கென நாலாயிரம் தொன் பசளை!





**– விவசாய அமைச்சர் உறுதி**

மட்டக்களப்பு மாவட்ட விவசாய சங்கங்களின் தலைவர்கள் மற்றும் அவற்றின் பிரதிநிதிகள் (22) சுற்றாடல்துறை அமைச்சர் நஸ ீர் அஹமட் மற்றும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஆகியோரை பாராளுமன்றத்தில் சந்தித்துப் பேசினர். விவசாய நடவடிக்கைகளில் தாங்கள் எதிர்கொள்ளும் பிர்ச்சினைகள் மற்றும் சவால்களை எடுத்து விளக்கிய விவசாயிகள், இவற்றை நிவர்த்திக்க அவசர முயற்சிகளை செய்யுமாறு அமைச்சர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் நஸீர் அஹமட், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஆகியோர் மேற்கொண்டனர்.

இச்சந்திப்பில் அமைச்சர் நசீர் அஹமட், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், அமைச்சின் செயலாளர் புஷ்பகுமார ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விவசாயிகளின் பிரச்சினைகளை செவிமடுத்த அமைச்சர் மஹிந்த அமரவீர, மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நாலாயிரம் தொன் பசளையை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்தார். எதிர்வரும் ஒக்டோபரில் செய்கை பண்ணப்படவுள்ள பெரும்போகச் செய்கைகளுக்கு இந்தப்பசளைகள் பயன்படுத்தப்படவுள்ளன.

மேலும், உரிய வேளைக்கான நீர்ப்பாசனம், கால்நடையாளர்களால் உரிமை கோரப்படும் மேய்ச்சல்தரை போன்ற விடயங்களுக்கு இருதரப்பினருடனும் கலந்துரையாடி முடிவெடுப்பதென இங்கு தீர்மானிக்கப்பட்டது.



நூருள் ஹுதா உமர்



# மனிதாபிமானமற்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள்

உலக நாடுகளில் அதிலும் குறிப்பாக இலங்கை இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகள் இன்று எதிர்கொள்ளும் மிகப் பெரிய அவலம் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம். அதுவும் பெண் பிள்ளைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. ஒவ்வொரு மணித்தியாலமும் எங்கோ ஓர் மூலையில் ஆகக்குறைந்தது ஒரு சிறுமி அல்லது சிறுவன் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகிக் கொண்டுதான் இருக்கின்றனர் என்கிறது ஆராய்ச்சி முடிவுகள்

ஆண், பெண் என்ற வேறுபாடின்றி சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் குறித்து சமூக அக்கறையுடன் வாய் வார்த்தைகளால் எம்மால் கூற முடிகின்றதே தவிர அதனைத் தடுக்கவோ, அதற்கு எதிரான நடவடிக்கைகளை வினைத்திறனுடன் முன்னெடுக்கவோ நாம் திராணியற்றவர்களாக இருக்கின்றோம் என்பதே உண்மை. சிறுவர் துஷ்பிரயோகமானது பிரதானமாக உடலியல் ரீதியான துஷ்பிரயோகம், பாலியல் ரீதியான துஷ்பிரயோகம், புறக்கணிப்பு ரீதியிலான துஷ்பிரயோகம், உளவியல் ரீதியான துஷ்பிரயோகம், உணர்வு ரீதியான துஷ்பிரயோகம் என பிரித்தறியப்படுகின்றது. குறிப்பாக முன்பு குறிப்பிட்டது போன்று இலங்கையில் உள்ள சிறுவர்கள் குடும்ப வன்முறைகளினால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். மிகவும் நெருங்கிய நபர்களினாலேயே சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதனாலேயே பல சம்பவங்கள் மூடி மறைக்கப்படுகின்றன என்று பலதரப்பட்ட செய்திகள் உறுதிப்படுத்துகின்றது.

வீடுகளில் பெற்றோர் சிறுவர்களிடம் தமது கோபத்தை தேவையற்ற விதத்தில் வெளிப்படுத்தல், முரணான தண்டணை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை சிறுவர்கள் தன்னுடைய நண்பரிடம் அல்லது தெரிந்தோர்களிடம் வெளிப்படுத்த முனைகின்றனர். இதன் காரணமாக இவர்கள் சமூகத்தில் கெட்டவர்களாக அடையாளப்படுத்தப் படுகிறார்கள். சிறுவர்களிடம் இறுக்கமாக நடந்துகொள்ளும் பெற்றோர், ஆசிரியர் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்களினால் சிறுவர்களின் மனநிலை மற்றும் தேவையை புரிந்து கொள்ள முடிவதில்லை, இதன் காரணமாக பெற்றோர் - சிறுவர்கள் மற்றும் ஆசிரியர் - சிறுவர்கள் இடையிலான உறவில் முறிவு ஏற்படுகின்றது. அதிகமாக இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகும் சிறுவர்கள் மனநோயாளிகளாக எதிர்காலத்தில் அடையாளப்படுத்த படுகின்றார்கள். அவர்களுடைய குடும்ப வாழ்க்கை உள்ளிட்ட அனைத்தும் கேள்விக்குறியாகின்றது. கல்வி நடவடிக்கைகள் முதல் சாதாரண வாழ்க்கை வரை பாதிப்படைகின்றன. எதிர்காலத்தில் தன்னுடைய குழந்தைக்கும் இவ்வகையான அடக்குமுறைகளை அவர்கள் பிரயோகிக்க முனைகின்றார்கள். இதன் காரணமாக சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள் சங்கிலித் தொடராக சந்ததிக்கு சந்ததி எடுத்துச் செல்லப்படுகின்றது என்பதே உண்மை.

அதுமட்டுமல்லாது பெரியவர்களின் கோபங்களை வெளிப்படுத்துகின்ற இடமாகவும் சிறுவர்கள் விளங்குகின்றார்கள். பெற்றோர் மற்றும் பெரியவர்கள் தமது கோபங்களை சிறுவர்களை அடித்தல் தண்டனை வழங்குதல் உள்ளிட்ட செயற்பாடுகளினால் வெளிப்படுத்துகின்றனர். இதனால் உடல் ரீதியான, உணர்வு ரீதியான, உள ரீதியான துஷ்பிரயோகங்கள் தற்போது மிக அதிகரித்துள்ளது. பெற்றோர்கள் தங்களுடைய விருப்பங்களை பிள்ளைகளிடத்தில் திணிக்க முயற்சி செய்வதும், அதற்காக அவர்களை கட்டாயப்படுத்தல் வற்புறுத்தல் என்பனவும் துஷ்பிரயோகங்களே என்கின்றனர் சிறுவர் நலன் பேணும் அதிகாரிகள்.

இவ்வாறான அணுகுமுறை உண்மையில் பெற்றோரிடத்தில் இருந்து சிறுவர்களை அன்னியப்படுத்துகின்றது. இதுவே பல துஷ்பிரயோகங்களுக்கும், அது குறித்து குழந்தைகள் வெளிப்படுத்த தயங்குவதற்கும் காரணமாக அமைகின்றது. அத்துடன் இப்போது, மிக சாதாரணமாக அரங்கேறிக் கொண்டிருக்கும் பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் மிகக் கொடூரமான துயரங்களை தந்துவிட்டுப் போகக் கூடிய ஒன்று. சிறுவர்களை அவர்களின் அனுமதியின்றி உடல் உறுப்புக்களை தொடுதல், வருடுதல், ஆபாச வார்த்தைகள் பிரயோகம், வற்புறுத்தல் என்பன பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்குள் அடங்குகின்றது. இது போன்ற துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகும் சிறுவர்கள் பெரும்பாலும் மன அழுத்தத்திற்கு ஆளாகி தவறான பாதையில் சென்று விடுகின்றார்கள். இவ்வாறான சிறுவர்கள் தமது அனுபவங்களை மற்றவர்களுக்கு செய்ய முற்படலாம் என்ற ஒரு கருத்தும் நிலவுகின்றது. ஆகவே அது எதிர்காலத்தில் ஒரு சிறந்த சந்ததியை கட்டியெழுப்ப தடையாகவே இருக்கும். அது சமூகத்தினதும் நாட்டினதும் எதிர்காலத்தை பாரியளவில் பாதிக்கும்.

சகலரும் அறிந்த புங்குடுதீவு மாணவி வித்தியா, ஐந்து வயதான சேயா சதெவ்மி, முல்லைத்தீவு சிறுமி நிதர்சனா, ஹிசாலினி, பாத்திமா ஆயிஷா போன்ற பல சிறுமிகளின் வன்முறை மரணங்கள் எமக்கு உணர்த்திச் செல்லும் ஒரே பாடம் இந்த உலகு பெண் குழந்தைகளை, பெண் குழந்தைகளாகவே சந்தோசமாக வாழ வைக்க தகுதியற்றது என்பதேயாகும். அதனை தாண்டி ஒழுக்கம் கற்பிக்க வேண்டிய பாடசாலைகள், அறநெறி கல்வி நிலையங்கள் போன்ற இடங்களிலும் பரவலாக இந்த சிறுவர் துஸ்பிரயோகம் இடம்பெறுவது அருவெறுப்பாக அமைந்துள்ளது. துஸ்பிரயோகம் இடம்பெற்றுள்ள இடங்களை கூர்ந்து கவனித்தால், குறித்த சிறுவர்களை சுற்றியுள்ளவர்களாலேயே அவர்கள் துஷ்பிரயோகத்திற்கும் துயரங்களுக்கும் உள்ளாக்கப்பட்டிருப்பர்.

பாதுகாப்புக்கு போடப்பட்ட வேலியே பயிரை மேய்ந்த கதையாக தம் உறவுகளாலேயே சிறுவர்கள் வன்புணர்வுக்குப் பலியாகி கொண்டிருப்பது மிகவும் வேதனையான விடயம். தமது தந்தை, சகோதரன், மாமன், போன்ற நெருங்கியவர்களினாலையே சிறுவர்கள் இந்தப் துஷ்பிரயோகங்களுக்குப் பலியாகி கொண்டிருக்கிறார்கள் என்பது கவலையான விடயம். மிரட்டல்கள், பயமுறுத்தல், சின்ன அன்பளிப்புக்கள் மூலம் அவர்களை தம்வசப்படுத்திப் பின்னர் இவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர் என பொலிஸ் அறிக்கைகள் திடமாக கூறுகின்றது இதை அறிந்திருந்தும் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களின் கவனயீனம் காரணமாக சிறுவர்கள் பலியாவது இப்போது அதிகரித்து வருகின்றது.

ஒரு பிள்ளை இவ்வாறான வண்புனர்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு அல்லது வெகுவாக பாதிக்கப்பட்டு பரபரப்பான செய்தியாக மாறினாலேயன்றி பொது மக்கள் இது குறித்து அறிந்து கொள்வது மிகக் குறைவு. ஊடகங்களில் வெளிவராமல், பொது மக்கள் பார்வைக்கு புலப்படாமல் இன்னும் பல கொடுமைகளும் வண்புனர்வுகளும், துன்புறுத்தல்களும் அன்றாட வாழ்வில் குழந்தைகள் அதிகமாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர் என்பது தவிர்க்கமுடியாத உண்மையாகும். பெற்றோர்கள் வேலைக்குச் செல்பவர்களாக இருந்தால் பெண் பிள்ளைகள் தனித்து வீட்டில் தனித்து விடப்பட்டுள்ள சூழ்நிலைகளில் இவ்வாறான ஆபத்துக்கள் அதிகமாக காணப்படுகின்றது.

துஸ்பிரயோகத்திற்கு ஆளான சிறுமி அண்மையில் உயிரிழந்த பின்னர் அவரது தந்தை இனிமேல் போதைப்பொருள் பாவனையில் தான் ஈடுபட மாட்டேன் என அறிவித்திருந்தார்.

இது உருக்கமான அறிவிப்பாக இருக்கலாம், ஆனால் இப்போது அந்த கருத்து நிலைநின்றதா ? இப்படிப்பட்டவர்களின் செயலால் இன்னும் எத்தனை சிறுவர்களை இழக்கப்போகின்றோம். திருடனாய் பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பது போல தனி மனித மாற்றம் இல்லையெனில் இன்னும் பல கொடூரங்களை நாங்கள் அனுபவித்துத் தான் ஆக வேண்டும். சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை அறிவிப்பதற்கு 1929 என்ற துரித இலக்கம் தற்போது 24 மணி நேரமும் செயற்பட்டு வருகின்றது.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் அடிப்படையில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஏழில் ஒன்றே முறைப்பாடு செய்யப்படுகின்றது. மேலும் சிறுவர் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் 60 நாடுகளின் பட்டியலை ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் வெளியிட்டிருந்தது. அதில் 3 நாடுகளே ஆசிய நாடுகளாக இருக்கின்றன. ஜப்பான், சிங்கப்பூர், மற்றும் தென் கொரியா ஆகினவாகும். ஏனைய 57நாடுகளும் மேற்கத்தேய நாடுகளாகும்.

அதனால் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக ஊடகங்களில் செய்தி அறிக்கையிடுவதற்கு முறையான ஊடக நெறிமுறை ஒன்று பின்பற்றப்படவேண்டும். அதற்காக ஊடக நெறிமுறையொன்றை விரைவில் ஏற்படுத்துவோம். அதற்கு அனைத்து ஊடக நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்து இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது.

இலங்கையில் 92% வீதமானவர்கள் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளார்கள். இருந்தபோதிலும் சிறுவர் மீதான குடும்ப வன்முறைகள் எதிர்பார்க்கின்ற அளவுக்கு குறைந்துள்ளதாக குறிப்பிட முடியாது. இதுகுறித்து விழிப்புணர்வுகளை இன்னமும் ஆசிரியர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடையே ஏற்படுத்த வேண்டிய தேவையுள்ளது. கொரோனா தொற்று காரணமாகவும், பொருளாதார நெருக்கடி நிலை காரணமாகவும் சிறுவர்கள், மட்டுமன்றி பெரியவர்களும் மிகுந்த மன அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். இந்நிலையை புரிந்து செயற்பட வேண்டியது பெரியவர்களின் பொறுப்பாகும். இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக நாடளாவிய ரீதியில் முடக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் குடும்ப உறுப்பினர்களினால் சிறுவர் மீதான வன்முறைகள் அதிகரித்திருந்தமை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இது சிறுவர்களுக்கு மிகுந்த மன அழுத்தத்தையும் தற்கொலைக்கு தூண்டும் செயலாகவும் மாறி இருந்ததை பல சம்பவங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. குறித்த காலகட்டத்தில் சிறுவர்கள் இணையத்தின் ஊடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக இணையவழி சிறுவர் துஷ்பிரயோக செயல்கள் அதிகரித்துள்ளன. இது குறித்து பெற்றோர்களுக்கு தெரியாத போதும், இலங்கையில் தற்போது அதிகரித்து வருகின்ற சிறுவர் துஷ்பிரயோக செயல்களில் இதுவும் பிரதானமான ஒன்றாகும். இவ்வாறான முறைப்பாடுகளை பெற்று அதற்கான சட்ட நடிவடிக்கைகளை மேற்கொள்ளவதற்காக சிறுவர்களுக்கான விசேட சைபர் விசாரணை பிரிவு ஒன்றை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவியுள்ளது என "சேவ் த சில்ரன்ஸ்" அமைப்பின் கொள்கை மற்றும் ஆய்வு இயக்குனர் ரன்ஜன் வெத்த சிங்க தெரிவித்த கருத்தை இங்கு அடிக்கோடிட்டு காட்டவேண்டியுள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிரான இலங்கையின் சட்டங்களில் சில சட்டங்கள் போதுமானதாக இருந்த போதிலும் அதனை செயற்படுத்துவதில் சிக்கல் உள்ளதனாலையே துஸ்பிரயோக சம்பவங்கள் கூடுதலாக இடம்பெறுகின்றது என்று கருதுகின்றேன். சிறுவர் தொடர்பான வழக்குகளுக்கு தீர்வினை எட்டுவதற்கு சில நேரங்களில் 5 முதல் பத்து வருடங்கள் வரை ஆகலாம், இதன் போது தவறு செய்தவரும், பாதிக்கப்பட்ட சிறுவரும் உடல் உளரீதியாக பல மாற்றங்களுக்கு உள்ளாகின்றனர். சிறுவர்களின் வழக்குகளில் நீதியை செயற்படுத்தில் துரிதப்படுத்தப்படுமாயின் அது இலங்கையின் எதிர்கால சந்ததிக்கு சிறந்தது. மட்டுமின்றி பாலியல் ரீதியிலான அறிவு குறைந்தைவர்களாகவே சிறுவர்கள் உள்ளனர். இவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். எமது நாட்டில் குறிப்பாக 16 வயதுக்கு குறைந்த 80 மூ சிறுமிகள் அவர்களின் விருப்பத்தினுடனேயே பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இதற்கு சிறுவர்களின் அறியாமையும் அதில் அவர்கள் எதிர்காலத்தில் முகம் கொடுக்கும் பிரச்சினை குறித்து தெளிவின்மையுமே முக்கிய காரணமாகும் என்கிறார் ரன்ஜன் வெத்த சிங்க.


எனவே பாலியல் கல்வி இலங்கையின் பாடதிட்டத்தில் சேர்க்கப்படுவதன் மூலம் சிறுவர்களுக்கு இது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தவதால் இவ்வாறான செயல்களில் இருந்து சிறுவர்கள் தம்மை பாதுகாத்து கொள்ளவும் பாலியல் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்கும் ஏதுவாக அமையும். அண்மையில் கல்முனையில் உள்ள மத ஸ்தலமொன்றில் இடம்பெற்ற சிறுவர் துஸ்பிரயோகத்திலும் நாட்டின் இன்னும் பல இடங்களில் இடம்பெற்ற இடம்பெறும் சிறுவர் துஸ்பிரயோகத்திலும் மேற்கூறிய விடயங்களே ஆதிக்கம் செலுத்தியது.

கல்வியறிவு கூடிய ஆசியாவின் ஆச்சரிய தேசத்தில் சிறுவர்களின் எதிர்காலம் மிகப்பெரும் கேள்விக்குறியாக அமையாமல் பாதுகாக்கவேண்டியது இலங்கை தாயின் கடமை. சட்டம் இன்னும் கடுமையாக்கப்பட்டு தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதியாக இல்லாது உடனடியாக தீர்ப்புக்கள் வழங்கப்பட்டால் தண்டனைகள் உடனடியாக பாரபட்சமின்றி குற்றவாளிகளுக்கு கிடைத்தால் அழகிய இலங்கையில் நேரிய எதிர்கால சந்ததி கிட்டும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# எங்களை மேம்படுத்துவதற்கான ஒரே ரகசியம்



எங்களை மேம்படுத்துவதற்கு நாம் ஆசைப் படுகிறோம். அதற்காக முயற்சி செய்கிறோம். அப்படியானால் எங்களை மேம்படுத்துவதற்கான ரகசியம் தான் என்ன.... ஆம்...! அது பெரியதொரு ரகசியம் அல்ல...

நாம் பேசிப் பேசி இருப்பதை விட எங்களின் இலக்கை அடைவதற்காக வேலை செய்வதுதான் அந்த ரகசியம்.

ஒவ்வொரு வெற்றிகரமான நபரும் ஏற்றுக்கொண்ட ரகசியம் இது.

படித்தவர், படிக்காதவர், படைப்பாற்றல் உள்ளவர், படைப்பாற்றல் இல்லாதவர் எவராக இருந்தாலும்,

இந்த ரகசியம் பலருக்குப் பலனாகவே இருந்து வருகிறது.

"குறைவாக பேசு
அதிகமாக வேலை செய்"

என்று சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம்.

இதன் முதல் படி, எங்கள் நேரம் மதிப்புமிக்கது என்பதைப் புரிந்துகொள்வது...

இரண்டாம் படி, பேசுவதை விட நாங்கள் விரும்புவதை செய்வதற்கு அவதானம் கொடுப்பது....

மூன்றாவது படி, வேலை செய்வதற்கும் பேசுவதற்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்வது.

வேலை செய்வது என்பது எங்கள் இடத்திலிருந்து எழுந்து, வெளியே சென்று வேலை முடிவதற்குச் செய்ய வேண்டியதைச் செய்வதாகும்.

பேசுவது என்பது வார்த்தைகளில் விடயங்களை விளக்குவதாகும்,

இதற்கு சில சமயம் நிறைய நேரம் எடுக்கும் அல்லது எங்கும் செல்ல முடியாமல் ஆக்கிவிடும்.

பேசிப் பேசி இருப்பவர்கள் சாதிப்பதில்லை என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். இவர்களை வாயால் வடை சுடுபவர்கள் என்பார்கள். பேசுவதை குறைத்து செயல்படுவதற்கு நாம் தயாராக வேண்டும்.

ஒவ்வொரு வெற்றிகரமான நபரும் ஏற்றுக்கொண்ட ரகசியம் இலக்கை அடைவதற்காக வேலை செய்வது!

செயலாற்ற நடவடிக்கை எடுப்பது அல்லது இலக்கை அடைய ஆர்வத்துடன் வேலை செய்வது எங்களை மேம்படுத்துவதற்கான அழகான வழிமுறை.

@ நாம் பயந்தாலும், அல்லது எத்தனை தெரியாத தடைகளை நாம் எதிர் கொண்டாலும்,

@ நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது செயற்பட வேண்டும்.

@ நாம் செயலாற்றும் போது,

@ நிறைய கற்றுக்கொள்வோம்,

@ புதிய யோசனைகளை உருவாக்குவோம்,

@ நாம் வளர்வோம்,

@ நாம் மிகவும் ஆரோக்கியமான நபராக மாறுவோம்.

@ எண்ணற்ற நன்மைகளைப் பெறுவோம்.

எல்லா வெற்றியாளர்களையும் பார்த்தால்....

அவர்களின் வெற்றிக்குப் பின்னால் ஒரே ஒரு பதில்தான் கிடைக்கும்.

அவர்கள் செயலாற்றினார்கள்.

முன்னோக்கி நகர்ந்தார்கள் என்பதே உண்மையான பதில்.

சில சிறிய, பெரிய தடைகளை சந்தித்தாலும் அவர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

அவர்கள் இறுதியில் வெற்றியைக் கண்டறிந்து தங்களை மேம்படுத்திக் கொண்டார்கள்.

நாம் இலக்கை நோக்கி நகரும் போது,

நாம் சிறப்பாக இருக்க வேண்டிய இடங்கள்...

மந்தமாக இருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் எவை என்பதை அது நமக்கு உணர்த்துகிறது.

நாம் பேசுவதை குறைப்போம்...
செயலாற்றுவதை கூட்டுவோம்...

***

# வொலிவோரியன் கிராமத்துக்கு மையவாடி: பிரதேச செயலாளருக்கு மகஜர் கையளிப்பு



(நூருள் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட வொலிவோரியன் கிராமத்துக்கான மையவாடியை அமைத்து தர உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி பிரதேச செயலாளருக்கு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களால் மகஜர் கையளிக்கப்பட்டு உள்ளது.

லக்ஸ்டோ மீடியா ஊடக வலையமைப்பின் முன்னெடுப்பில் நேற்று முன் தினம் சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு நேரில் சென்று முறைப்பாடு மேற்கொண்டனர்.

ொதுநல செயற்பாட்டாளரும், பல்துறை கலைஞரும், வொலிவோரியன் கிராமத்தை சேர்ந்தவருமான அஹமட் லெப்பை அன்ஸார் தலைமையில் சென்ற இவர்கள் உதவி பிரதேச செயலாளரை சந்தித்து பேசினர்.

வொலிவோரியன் கிராமத்தில் மையவாடி அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து பிரதேச செயலாளராக ஏ.எல்.எம். சலிம் பதவி வகித்தபோது ஒதுக்கி கொடுக்கப்பட்ட இடத்தில் தற்போது மடுவம் அமைக்க சில முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன, இதை அனுமதிக்க கூடாது என்று உதவி பிரதேச செயலாளருக்கு அன்ஸார் எடுத்து சொன்னார்.

பிரதேச செயலாளரின் சார்பாக உதவி பிரதேச செயலாளர் மகஜரை பெற்று கொண்டார்.

# இரு முஸ்லிம் தூதுவர்கள் நாடு திரும்பினர்

ஓமான், துருக்கி ஆகிய நாடுகளின் தூதுவர்களாகப் பணிஜபுரிந்த இருவர் தமது பதவிக் காலத்தை நிறைவு செய்து தாயகம் திரும்பியுள்ளனர்.

ஓமான் நாட்டுத் தூதுவராகப் பணிபுரிந்த அமீர் அஜ்வாத் தாயகம் திரும்பியதும், வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேநேரம் துருக்கித் தூவராகப் பணிபுரிந்த எம்.ஹஸனும் நாடு திரும்பியுள்ளார். இவருக்கும் வெளிளிவகார அமைச்சில் உயர் பதவியொன்று கிடைக்கவுள்ளது.

இதேநேரம் ஓமான் தூதுராக வெளிவிவகாரச் சேவையில் சபருல்லா கான் நியமிக்கப்பட்டுள்ளார்.

# மர்ஹூம் எம்.ஐ.எம்.முஹைதீன் நினைவாக அக்கரைப்பற்றில் ஆராய்ச்சி நிலையம்

காலஞ்சென்ற ஆராய்ச்சியாளர் எம்.ஐ.எம். முஹைதீன் நினைவாக அக்கரைப்பற்றில் ஆராய்ச்சி ஆவண நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி நாளை மாலை 4 மணிக்கு அக்கரைப்பற்று நகர பள்ளிவாசல் வீதி 117ஆம் இலக்கத்தில் ,ந்த நிலையம் ஆரம்பிக்கப்படும். மர்ஹூம் எம்.ஐ.எம்.முஹைதீனின் நீண்ட கால பணிகளை முன்னெடுப்பதற்கும், முஸ்லிம் சமூகத்துடைய ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதற்குமாக இந்த பணியகம் செயற்படுமென அவரது சகோதர் எம்.ஐ.ஜாபர் தெரிவித்தார்.

அவருடைய முதலாவது நினைவு தினத்தை முன்னிட்டு ,ந்த நிலையம் திறக்கபடவுள்ளதுடன், இதில் அவரால் எழுதப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் பாதுகாப்பாக வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மரநடுகை வாரத்தை முன்னிட்டு நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கியில் மர நடுகை



(எம்.என்.எம்.அப்ராஸ்)

தேசிய மரநடுகை வாரத்தை முன்னிட்டு கல்முனை பிரதேச செயலகத்தின் மர நடுகை பிரதான நிகழ்வு நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கியில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத்அலி தலைமையில் (23) நடைபெற்றது.

கல்முனை சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலிஹ், நற்பிட்டிமுனை வங்கியின் முகாமையாளர் எம்.ஏ.எம்.பைஸால், முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.எஸ்.பரீரா, கருத்திட்ட முகாமையாளர் ஏ.எம்.எஸ். நயீமா, வலய உதவி முகாமையாளர் யூ.எல். தௌபீக் வங்கி உதவி முகாமையாளர் ஐ.ரோஸினி மற்றும் உத்தியோகத் தர்களும்,நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கியின் கட்டுப்பாட்டு சபை உறுப்பினர்களும் இதன் போது கலந்து கொண்டனர்.





மே.மாஃமினுஃ எல்லலமுல்ல ஸஹிரா முஸ்லிம் வித்தியாலயத்தில் அதிபர் எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா அவர்களின் தலைமையில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி நூல் சகல மாணவர்களுக்கும் 21ஃ09ஃ2022 அன்று பேருவளை அல்ஹாஜ் ஸவாஹிர் அவர்களது அனுசரணையுடன் வழங்கி வைக்கப்பட்டது. இதன் போது பாடசாலையின் உதவி அதிபர் எம்.எஸ்.எம்.முகர்ரம், பா.அ.ச.உறுப்பினர் எச். ஆர். ஸஹ்லான் (துஃ.), வகுப்பு உதவி ஆசிரியை எம்.ரீ.எப்.ஸப்ரினா மற்றும் புத்தகம் பெறும் மாணவி ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# சவூதி அரேபியாவின் 92 ஆவது தேசிய தினம்: வரலாறுகாணாத கொண்டாட்டங்கள் ஆரம்பம்!



சவூதி அரேபியாவின் 92 ஆவது தேசிய தினத்தை முன்னிட்டு அந்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வரலாற்றில் இதுவரை இல்லாத மிகப்பெரிய கொண்டாட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

பொது பொழுதுபோக்கு ஆணையத்தின் இயக்குநர்கள் குழுவின் தலைவர் துர்கி அல்-ஷேக், 'இது எங்கள் வீடு' என்ற கருப்பொருளின் கீழ் ஒன்பது நாள் அதாவது கடந்த செப்டெம்பர் 17 தொடக்கம் செப்டம்பர் 26 வரை நிகழ்வுகள் ஏற்பாடு செய்துள்ளது.

மற்றும் கடல்சார் நிகழ்ச்சிகள் கொண்டாட்டங்களின் முக்கிய சிறப்பம்சங்கள், போர் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், சிவில் விமானங்கள், கப்பல்கள் மற்றும் படகுகள் ஆகியவற்றின் முன்னிலையில் இந்த நிகழ்ச்சிகள் இராணுவ மற்றும் சிவில் துறைகளால் 34 நிகழ்வுகள் நிகழ்த்தப்படவுள்ளது.

இது தேசிய தின கொண்டாட்டங்களின் வரலாற்றில் மிகப்பெரிய வான் மற்றும் கடல் நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.

சவூதி போர் விமானங்கள், இராணுவம் மற்றும் சிவில் விமானங்கள் இராச்சியத்தின் வரலாற்றில் மிகப்பெரிய விமான கண்காட்சியில் பங்கேற்கும்

'ஒரு தாயகம் வணக்கம்' என்ற முழக்கத்தின் கீழ், இராச்சியம் முழுவதும் 13 முக்கிய நகரங்களில் நடைபெறும் 34 நிகழ்வுகள் இடம்பெறும்.

ரியாத், ஜித்தா, அல்-கோபர், தம்மாம் மற்றும் ஜூபைல் உட்பட சவூதியில் உள்ள அல்-அஹ்சா, தைஃப், தபூக் மற்றும் அபா ஆகிய நகரங்களிலும் தேசிய தின விமான நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அதுமட்டுமில்லாது நாடு முழுவதும் உள்ள 18 நகரங்களில் வானவேடிக்கை காட்சிகள் நடைபெறும் மற்றும் உள்ளூர் பூங்காக்கள் தேசிய தின நீண்ட வார இறுதியில் பொதுமக்களுக்கு திறந்திருக்கும்.

புதன்கிழமை முதல் ஞாயிறு வரை தேசிய தின கொண்டாட்டங்களுக்காக பாடசாலைகளும் நான்கு நாட்களுக்கு தேசிய தினத்தை முன்னிட்டு நீண்ட விடுமுறையை கொண்டாடுகின்றனர்.

# அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் நினைவாக இரத்ததான முகாம்!





(செ.திவாகரன்)

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் பணிப்பாளர் சபையின் ஆயுட்கால அங்கத்தவரும் முன்னால் இராஜாங்க அமைச்சருமான கௌரவ ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில், அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயாவின் 109வது பிறந்த தினத்தை முன்னிட்டும், இலங்கை பொலிஸ் தினைக்களத்தின் 156வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டும் வியாழனன்று ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

மேலும் இந்நிகழ்வில் ஹட்டன் உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் திரு. பிரியந்த விக்ரமநாயக்க, தலைமை காவல் கண்காணிப்பாளர் திரு.ரஞ்சித் ஜெயனே, நுவரெலியா இரத்த வங்கி பிரிவின் வைத்திய அதிகாரி வைத்தியர் னு.ஒ.வு.செனவிரத்ன, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் நிர்வாக பிரிவின் பணிப்பாளர் P.சக்தியவேலு, அபிவிருத்தி பிரிவின் பிரதி பணிப்பாளர் திரு.து.தியாகராஜா, முகாமையாளர் திரு.ஏ.ஜீவானந்தராஜா, ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் வதிவிட முகாமையாளர் திரு.விஜேசிங், நோர்வூட் விளையாட்டு அரங்கின் வதிவிட முகாமையாளர் திரு.கெப்ரியல் மற்றும் ஊழியர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துக்கொண்டனர்.

# பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் மாதிரி உணவகம் திறப்பும், மரநடுகையும், ஊழியர்கள் கௌரவிப்பும்!





(நூருள் ஹுதா உமர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நோயாளிகளுக்கும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் மக்களுக்கும் தரமான சுகாதாரமான மலிவான தொற்றா நோயை தவிர்க்கும் விதமான உணவகம் வியாழனன்று (22) கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் டீ. ஜீ. மலின்டன் கொஷ்டா மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் திறந்து வைக்கப்பட்டது.

பொத்துவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டீ. ஆர்.எஸ்.டீ. ரஜாப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மரநடுகையும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் டாக்டர் எம்.பி. அப்துல் வாஜித் மற்றும் பணிமனையின் பிரிவுத்தலைவர்கள் பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் உத்தியோகத்தர்கள் அபிவிருத்திக் குழுவினர் உள்ளிட்ட பெருந்திரளான பங்குபற்றுனர்கள் கலந்து கொண்டனர்.

# கல்முனை வலயத்தில் முதன் முதலாக பாடசாலைத் தோட்ட அறுவடை விழா!



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

பாடசாலைத் தோட்டங்களை நிர்மாணம் செய்தல் எனும், கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைவாக கல்முனை வலயத்தில் முதன் முதலாக இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தில் தோட்டம் அமைக்கப்பட்டு அதன் அறுவடை விழா அண்மையில் (20) பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம். றிசாத் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்விற்கு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ் சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் பணிப்பாளர் சபீனா ஹசம்டீன் கௌரவ அதிதியாகவும் விசேட அதிதிகளாக பிரதித் கல்விப்பணிப்பாளர் ஏ.எச். எம்.ஜாபிர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஸ்லம் சஜா, உதவிக் கல்விப் பணிப்பாளரும் சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளருமான என்.எம்.அப்துல் மலிக், கல்முனை முஸ்லிம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.எம். சம்சம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் செயற்றிட்ட உத்தியோகத்தர்களான நதீரா சாலி, லைலா உடையார், குமுது பேரேரா, மசினா இல்யாஸ் உட்பட மும்மதத் தலைவர்கள், அதிபர்கள் ஆசிரியர்கள், மற்றும் மாணவர்கள் எனப் பலரும், கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வுக்கான ஏற்பாட்டினை முஸ்லிம் பெண்கள் ஆராய்சி செயல் முன்னணி மற்றும் டயகோனியா நிறுவனம் என்பன வழங்கியிருந்தன.

# சம்மாந்துறையில் இளைஞர் மன்றம்

அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மூண்று பிரதேச செயலகங்களில் வசிக்கும் இளைஞர் யுவதிகளின் திறன் விருத்தி மற்றும் சமூகமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் ஆரம்ப கட்ட கலந்துரையாடல் ஒன்று சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஜனாப். ஸுடுஆ. ஹனீபா அவர்களின் தலைமையில் 2022/09/20 செவ்வாய் அன்று இடம்பெற்றது.

மேலும் இக்கூட்டத்தில் GAFSO திட்டப்பணிப்பாளர், அலுவலகர்கள் மற்றும் ஏனைய இளைஞர்துறை சார் அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.



எதிர்காலத்தில் சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் சமூக சேவை பிரிவுடன் இளைஞர்களையும் இனணத்து திறன் விருத்தி / சமூகம் சார்ந்த விடயங்களில் பங்களிப்பை சம்மாந்துறை பிரதேசத்தில் வழங்கி இளைஞர் சார் செயற்பாடுகளையும் முன்னெடுக் கப்படவுள்ளது.

இதன் மூலம் இளைஞர்கள் மத்தியில் சமூக ஆர்வலர்களை உருவாக்குவதே நோக்கமாகும்.

# ஒரே சூலில் பிறந்த நான்கு குழந்தைகள்!



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

ஒரே சூலில் நான்கு குழந்தைகளைப் பிரசவித்த ஏழ்மைத் தாய்க்கு தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான "சமூகஜோதி" வாமதேவன் தியாகேந்திரன் உதவு தொகை வழங்கியுள்ளார்.

முதல் கட்டமாக அக் குழந்தைகளின் பராமரிப்பிற்காக ஒரு இலட்சம் ரூபாய் உதவு தொகை வழங்கப்பட்டுள்ளது.

கல்குடா மீடியா போரம் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம். பாரிஸ் மூலம் குழந்தைகளின் தாயிடம் இந்த நிதியுதவித் தொகை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

புத்தளம் கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவின் ஹுசைனிய்யா புரத்தை சேர்ந்த 24 வயதான இளம் தாய் ஒருவர் கடந்த மாதம் 27ஆம் திகதி ஒரு ஆண், மூன்று பெண் என நான்கு குழந்தைகளை ஒரே சூலில் பிரசவிததிருந்தார்.

இது புத்தளம் தள வைத்தியசாலை வரலாற்றில் பதிவான முதல் நிகழ்வு என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஜனாஸா வாகன கொள்வனவிற்கு நிதியுதவி கோரல்!

(இப்னு ஷெரீப்)

மாளிகைக்காடு பிரதேசத்தின் ஜனாஸா நலன்புரி நடவடிக்கைகளை சிரமமின்றி மேற்கொள்ளும் வகையில் ஜனாஸாக்களை ஏற்றும் வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக பரோபகாரிகளிடமிருந்து நிதியுதவிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மாளிகைக்காடு பிரதேசத்தில் ஜனாஸா விடயங்களைக் கவனிப்பதற்கென நலன்புரி அமைப்பொன்று உருவாக்கப்பட்டு சிறப்பான பணிகளை ஆற்றிவரும் நிலையில் தூர பிரதேசங்களிலிருந்து ஜனாஸாக்களை கொண்டுவரும் நடவடிக்கைகளின்போது பல்வேறு அசௌகரியங்கள் நிகழ்கின்றன.

இதனால் தற்போது நிகழும் பொருளாதார சூழ்நிலையில் வறிய மற்றும் நடுத்தர குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் அதிக செலவு செய்து தனியார் வாகனங்களை வாடகைக்கு பெற வேண்டியிருப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வாறான அசௌகரிய நிலைகளைத் தவிர்க்கும் பொருட்டு ஜனாஸாக்களை ஏற்றி இறக்குவதற்கான வாகனமொன்றை கொள்வனவு செய்வதற்கு மாளிகைக்காடு ஜனாஸ ா நலன்புரி அமைப்பு பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. இதற்காக நாற்பது இலட்சம் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் இச் செயற்பாட்டிற்கு உதவி செய்ய விரும்பும் தனவந்தர்கள் அமைப்பின் செயலாளரைத் தொடர்புகொண்டு (077-7558014) தம்மாலான நிதியுதவிகளை தந்துதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

அ.அஸ்வர்
0777 065 024


# 9 நூல்களின் அறிமுக விழா!

(பைஷல் இஸ்மாயில்)

மூதூர் - சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் பாலசுகுமாரின் ஒன்பது நூல்களின் அறிமுக விழா எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நூல் அறிமுக விழாவுக்கு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மூ.கோபாலரத்தினம் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சேனையூர் கலம்பகம், கரைகள் கடந்து, நுநணாய யேவலையஅ, ஐலெலையஅ ரூ ஆரளைஉ ரூ னுயஉெந ழக நுயணாயஅ வுயஅடைையளெ, கறுப்பி, கொடி எழு அன்னப்புரவி, தமிழ் மரபில் சிவாஜி, கணேசனின் நடிப்பு ஈழ நாட்டியம், ஓ தோழனே நந்தினி,




நஞ்சுமிழும் காளான்கள் என்ற இந்த 9 நூல்களின் அறிமுகமும் இதன்போது இடம்பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.




# கந்தளாயில் விஞ்ஞான பிரிவில் பல்கலைக்கழகம் தெரிவான 16 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு!







(எப்.முபாரக்)

ஒரு சமூகத்தின் மேம்பாட்டை உயர்த்துவது வெளி உலகத்திற்கு பறைசாற்றுவது கல்வித்துறையன்றி வேறொன்றுமில்லை.

கல்வித் துறைகளில் பல்வேறு வகையான சாதனைகள் அண்மைக்காலமாக நாட்டில் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான ஒரு கல்விச் சாதனை செயற்பாடு கந்தளாய் மண்ணில் இடம்பெற்றுள்ளது.சுமார் 60 வருடங்களுக்கு பின்னர் கந்தளாய் அல் தாரீக் தேசிய பாடசாலையில் வைத்தியத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டது கந்தளாய் சமூகத்திற்கு கிடைத்த பெரும் கௌரவாக கருதப்படுகின்றது.

இவ்வாறான கௌரவிப்பு செயள்பாடுகள் கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட கந்தளாய் தி/அல்தாரிக் தேசிய பாடசாலையின் இவ்வருடம் முதல் தடவையாக விஞ்ஞான பிரிவில் பல்கலைக்கழகம் தெரிவான மற்றும் அதிகூடிய பெறுபேறுகள் பெற்ற 16 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் முதல்வர் ஐ.எம். தௌபிக் அவர்களின் தலைமையில் அல் தாரீக் தேசிய பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் செவ்வாய்கிழமை (20) மிகவும் விமர்சையாக இடம்பெற்றது.

இதன் போது இப்பாடசாலையில் முதல் தடவையாக விஞ்ஞானப் பிரிவில் தோற்றி பத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டதோடு,கந்தளாய் மண்ணில் வைத்தியத்துறைக்கு முதல் தடவையாக தெரிவு செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவர்களை பேண்ட் வாத்தியங்களுடன் அழைத்துச் செல்லப்பட்டு அதிதிகளினால் நினைவுச் சின்னங்காள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம்.இ.எம்.டபிள்யு.ஜி.திஸ ாநாயக்க,விசேட அதிதியாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் என். புள்ளைநாயகம்,மற்றும் கௌரவ அதிதியாக கந்தளாய் வலயக் கல்விப் பணிப்பாளர் இ.ஜி.ஐ.பி.தர்மதிலக்க,கல்வி அதிகாரிகள்,உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள்,பாடசாலை அதிபர்கள்,ஆசிரியர்கள்,பழைய மாணவர்கள்,பெற்ரோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

## தெளிவுக்கான தேடல்

வாசகர்களே!
உங்கள் பிரதேசங்களிலுள்ள பொதுவான பிரச்சினைகளையும் நியூஸ்ப்ளஸ் இன் தெளிவுக்கான தேடல் பகுதியூடாக வெளிக்கொண்டுவரலாம்.
செய்திக்குப் பொறுப்பானவரின் அங்கீகாரக்கடிதத்துடன் உங்கள் கட்டுரையையும் இணைத்து **editor@newsplus.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# புத்தளம் - மன்னார் வீதி நாட்டின் அபிவிருத்திக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்கிறது!



## – முசலி பிரதேச சபையில் பிரேரணை நிறைவேற்றம்!

முசலியின் அதி உயர் சபையான முசலி பிரதேச சபைக் கூட்டம் புதன்கிழமை 21.09.2022, தவிசாளர் ஏ.எச். சுபிஹான் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் முசலி பிரதேச சபை உறுப்பினர் பி.எம். முஜிபுர் றஹ்மான் இப்பிரேரணையை முன்வைத்தார்.

இப்பிரேரணை முசலி பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவராலும் ஏகோபித்த ரீதியாக ஏற்றுக் கொண்டு நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணையை கௌரவ ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த பிரேரணை வருமாறு...

“கௌரவ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களே,

ஜனாதிபதி செயலகம்,

கொழும்பு.

நாட்டின் அபிவிருத்தி மற்றும் புத்தளம் - மன்னார் வீதி

உலக நாகரிகம், பொருளாதார வளர்ச்சி, சமூக மேம்பாடு மற்றும் சர்வதேச உறவுகள் என்பவற்றுக்கு பட்டுப் பாதைகள் பெரும் பங்களிப்புச் செய்துள்ளது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அதேபோல், ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், சமூக மறுமலர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் சிறந்த பதைகள் பெரும் பங்காற்றுகின்றன என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

30 வருடகால யுத்தத்தின் போது வடக்கு கிழக்கில் பல வீதிகள் சேதமடைந்துள்ளன. இம்மக்களின் மறுமலர்ச்சியும், நாட்டின் வளர்ச்சியும், பொருளாதார எழுச்சியும் இப்பிரதேசத்தில் பாதைகள் வளர்ந்த பிறகுதான் ஏற்பட்டன என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்த மறுமலர்ச்சிக்கு நீங்களும் அளப்பரிய பங்களிப்பைச் செய்திருக்கிறீர்கள் என்பதை நாங்கள் அறிவோம்.

அதேபோல், 2001ல் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் போது, நீங்கள் மாண்புமிகு பிரதமராக இருந்தீர்கள். அதன்போது புத்தளம் - மன்னார் பாதை மற்றும் தலைமன்னார் - தனுஷ்கோடி கப்பல் சேவை திறப்பது தொடர்பாக இந்தியாவுடன் பல கட்டப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டீர்கள். இப்போது நீங்கள் நிறைவேற்று ஜனாதிபதியாக புரட்சிகர செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றீர்கள். எனவே, புத்தளம் - மன்னார் வீதியை திறந்து மக்கள் பாவனைக்கு விடுவது உங்களுக்கு எளிதான பணியாக இருக்கும்.

ஏனெனில் கொரோனா வைரஸைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதாரப் பிரச்சினையால் நாடு மிகவும் நெருக்கடியான தருணத்தில் உள்ளது. எனவே, நாட்டை பொருளாதார ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய பாரிய சுமை உங்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. அதனை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டு சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லுகிறீர்கள். அதனை சிறந்த முறையில் செயல்படுத்த உங்களுக்கு உடல் மற்றும் உள ஆரோக்கியம் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

அதன் அடிப்படையில், அதேபோல் தற்போது உலகில் உருவாகி வருகின்ற பாதை வலையமைப்பினூடாக இலங்கைத் தீவை உலக நாடுகளுடன் இணைக்கின்ற மாவட்டமாக மன்னார் மாவட்டம் திகழ்கிறது.

இம்மாவட்டம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகிறது.

1. நாட்டின் அரிசி உற்பத்திக்கு பாரிய பங்களிப்பை வழங்குகிறது.
2. நாட்டின் மின் உற்பத்தியில் காற்றாலை மின்சாரம் வேகமாக வளர்ந்து வருகிறது.
3. நாட்டின் மீன் உற்பத்தியில் குறிப்பாக உலர் மீன் உற்பத்தியில் பங்களித்தல்.
4. நாட்டை வளர்ந்த நாடாக மாற்றுவதற்கான எண்ணெய் வளம்.
5. பனை மரத்தால் உற்பத்தி செய்யப்படும் பல பொருட்கள்.
6. முக்கிய சுற்றுலா தளங்கள்.
   I. கிறிஸ்தவர்களின் முக்கிய தேவாலயம் மடு தேவாலயம்.
   II. திருக்கேதீஸ்வரம் இந்துக்களின் முக்கிய கோயிலாகும்.
   III. டீழைடிழுடி மரம் இலங்கையில் மட்டுமே காணப்படுகிறது.

இவ்வாறு இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பை வழங்கும் மன்னார் மாவட்டத்திற்கான போக்குவரத்து வசதிகள் பாரிய குறைபாடாகவே காணப்படுகின்றது.

எனவே புத்தளம் - மன்னார் வீதியை அபிவிருத்தி செய்வது முக்கியமாக நோக்கப்படுகின்றது. இது மன்னார் மாவட்டத்திற்கு சிறந்த போக்குவரத்து வசதிகளை வழங்கும். இது இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை வழங்கும்.

எனவே இவ்வீதியை அபிவிருத்தி செய்யுமாறு சபை உறுப்பினர்கள் அனைவரும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றனர். இது இலங்கையின் அபிவிருத்திக்கும் சமூக மறுமலர்ச்சிக்கும் பாரிய பங்களிப்பை வழங்கும் என தெரிவித்துக் கொள்கிறோம்.”

# தொல்பொருள் என்னும் பெயரிலே தமிழரின் வரலாற்றுப் பெருமை கொண்ட திருக்கோணேஸ்வரம் சூரையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றது!

## – பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் ஜனா காட்டம் –

தொல்பொருள் என்னும் பெயரிலே தமிழரின் வரலாற்றுப் பெருமை கொண்ட திருக்கோணேஸ்வரம் சூரையாடப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டிலே வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட தொல்பொருள் திணைக்களம் திருக்கோணேஸ்வரத்தில் மாத்திரம் தொல்பொருள் என்கின்ற போர்வையில் குடியேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய விடயம் தொடர்பிலான ஒத்துவைப்புப் பிரேரணை மீததான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொல்பொருள் என்னும் பெயரிலே தமிழரின் வரலாற்றுப் பெருமை கொண்ட திருக்கோணேஸ்வரம் சூரையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கோணேஸ்வரர் ஆலயத்தின் புகழை வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் இருந்தே பல புராணங்கள் போற்றியுள்ளன. இதற்கு சிறந்த உதாரணம் தட்சண கைலாய புராணமாகும். இலங்காபுரியை ஆண்ட இராணவனால் வழிபட்ட இவ்வாலயத்தின் பெருமையை திருஞானசம்மந்தர் பதிகம் மூலம் பாடியுள்ளார். பல்லவ, சோழர் கால கல்வெட்டுக்கள் பலவற்றில் இதன் பெருமை எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

1624ம் ஆண்டு போர்த்துக்கேயர் திருகோணமலையிலே ஆட்சி செய்த காலம் இந்தக் கோயிலை உடைத்து அதன் செல்வங்களை அள்ளிச் சென்றது மாத்திரமல்லாமல், அந்தக் கோயிலை உடைத்த கற்களைக் கொண்டுதான் சரத் வீரசேகர பாராளுமன்ற உறுப்பினர் கூறிய பிறட்ரிக் கோட்டை என்பது உருவாக்கப்பட்டது. ஆனால் அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் 1952லே மூன்று மதஸ்தலங்களிலே அதுவும் ஒன்று என்று கூறுகின்றார்.

ஐம்பது வருடங்களுக்கு மேலாக திருக்கோணேஸ்வரத்தைப் புனித நகராக மாற்ற வேண்டும் என்று இந்துக்கள் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். 1965ல் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒரு நல்லிணக்கத்தை இந்த நாட்டு அரசுடன் ஏற்படுத்த வேண்டும். இலங்கையில் தமிழர்களின் இனப்பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வைக் காண வேண்டும் என ஆட்சி அதிகாரத்தில் பங்குகொண்டிருந்தார்கள். திருச்செல்வம் அவர்கள் உள்ளூராட்சி அமைச்சராக இருந்தார். அவர் திருகோணமலை நகரைப் புனித பூமியாக மாற்ற வேண்டும் என்ற பிரேரணை கொண்டு வந்திருந்தார். டட்லி சேனநாயக்காவும் அதற்கு அனுசரணை கொடுத்திருந்தார். ஆனால் விகாராதிபதிகளின் எதிர்ப்பைத் தாங்க முடியாமல் திருச்செல்வத்திற்கே தெரியாமல் அந்த ஆணைக்குழுவை நிராகரித்தமையால் திருச்செல்வம் அவர்கள் அமைச்சரவையை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

இருந்தாலும் 2018ம் அண்டு திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தலே அரச அதிபர் அங்குள்ள நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னலையிலே முடிவு எட்டப்பபட்டது. அங்கு கடைகள் வைத்திருந்த 45 பேரும் அமைச்சர் சொல்வது போன்று அந்தக் கோயிலையோ, அப்பிரதேசத்தையோ சுற்றியிருந்தவர்கள் அல்ல. அன்று இரத்தினபுரியிலே இருந்து திருகோணமலைக்கு வந்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட புஞ்சிநிலமே அவர்கள் தன்னுடைய பிரதேசத்தில இருந்தும், தம்புள்ளை, குருநாகல், பொலநறுவை போன்ற பிரதேசங்களில் இருந்தும் தன்னடைய தேர்தல் அடாவடி வேலைகளுக்காகக் கொண்டு வரப்பட்டவர்கள் தான் அங்கு குடியேற்றப்பட்டார்கள், அவர்களின் வாழ்வாாரத்திற்காக அந்தக் கோயில் பிரதேசத்திலே தற்காலிகக் கடைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டதென்பதை இந்தச் சபை தெரிந்துகொள்ள வேண்டும்.

அந்தக் கோயில் நிருவாகம் மனச்சாட்சியுடன் நடந்து கொள்கின்றார்கள். என்னவென்றால் 2018ம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக அவர்களை அங்கு தங்க வைப்பதற்கு எவ்வித ஆட்சேபனைகளும் இல்லை என அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், தொல்பொருள் திணைக்களம் என்பது இந்த நாட்டிலே வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டது. ஆனால் திருகோணமலையில், கோணேஸ்வரத்தில் மாத்திரம் தொல்பொருளை பாதுகாக்க வேண்டிய திணைக்களம் அவ்விடத்தில் வேற்று மதத்தவர்களை, இனத்தவர்களை அந்தக் கோயிலையே வழிபடாதவர்ககளைக் கொண்டு வந்து தொல்பொருள் திணைக்களம் என்கின்ற போர்வையில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் கோயில் நிருவாகத்தினரை ஆலோசனை பெறுவதற்காகக் கூப்பிடவில்லை, அறிவுறுத்தல் தருவதற்காகவே அழைத்துள்ளோம், நாங்கள் அவர்களுக்கு நிரந்தரமான கடைகள் அமைத்துக் கொடுக்கப் போகின்றோம் என ஆளுநரும், தொல்பொருள் அதிகாரியும் கூறியுள்ளார்கள். ஆனால் அந்தக் கடைகளின் வடிவங்களைப் பார்க்கும் போது அந்தக் கடைகள் கடைகளாக இல்லை, அவை குடியேற்ற வீடுகளாகவே இருக்கின்றது. எனவே கௌரவ அமைச்சர் அவர்கள் இந்த விடயத்தின் நியாயத் தன்மையைப் புரிந்துகொண்டு நியாயமாக நடந்துகொள்ள வேண்டும்.

கிழக்கு மாகாணத்திற்கென ஒரு தொல்பொருள் செயலணியை இதற்கு முன்பிருந்த ஜனாதிபதி கோட்டபாய அவர்கள் அமைத்திருந்தார். முன்னாள் இராணுவத் தளபதி கமால் குணரட்ண தலைமையில் முழுக்க முழுக்க சிங்கள அதிகாரிகளையும் பௌத்த பிக்குகளையும் கொண்ட ஒரு செயலணியாக அது அமைக்கப்பட்டது. இன்று திருகோணமலை திருக்கோணேஸ்வரத்திலே சிங்களம் மட்டும் பேசக் கூடிய பல்கலைக்கழக மாணவர்களினாலேயே அந்தப் பிரதேசத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி நடக்கின்றது. ஏன் இந்த நாட்டிலே தொல்பொருளுடன் தொடர்புடைய ஏனைய மதத்தவர்கள் இல்லையா? கிழக்கு மாகாணத்திற்கென நூறு வீதம் சிங்களவர்களினால் மாத்திரம் உருவாக்கப்பட்ட செயலணியும், தொல்பொருள் சம்மந்தமாக ஆராய்ச்சி செய்யும் பல்கலைக்கழக மாணவர்களும் எதனைச் செய்ய முனைகின்றார்கள்?



கிழக்கு மாகாணத்திலே சிங்களப் புராதனச் சின்னங்கள் மாத்திரம் தான் இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்த முயற்சிக்கின்றார்களா? ஏனைய மதத்தவர்களும் அந்தச் செயலணிக்குள் உள்ளடக்கட வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் அந்தச் செயலணி கலைக்கப்பட வேண்டும். அந்தச் செயலணிக்குள் ஏனைய மதத்தவர்களோ, ஆராய்ச்சி செய்யும் பல்கலைக்கழக மாணவர் குழாமிற்குள் ஏனைய மத மாணவர்களோ உள்வாங்கப்பட்டால் அங்கிருப்பது எந்த மதத்தைச் சார்ந்த, எந்த மதத்தினர் வழிபட்ட புராதனப் பொருட்கள் என்பது வெளிப்பட்டுவிடும் என்ற பயமா?

முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகரவிற்கு ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இந்த நாட்டிலே நாங்கள் நல்லிணக்கத்தை விரும்புகின்றோம். நீங்கள் கூறுவது போன்று நீங்கள் தமிழருக்கு இரத்தம் கொடுத்திருக்கலாம், நீங்கள் குறிப்பிட்ட தமிழர்களுடன் சேர்ந்து வாழ்ந்திருக்கலாம். ஆனால், கடந்த அமைச்சரவையிலே இருந்த இனவாதிகளுள் முக்கியமான இனவாதி நீங்களாகவே இருப்பீர்கள்.

இந்த நாட்டை அழித்த சில இனவாதிகள் இருந்திருக்கின்றார்கள். குறிப்பாக கே.எம்.பி.ராஜரெட்ண, ஆர்ஜி. சேனநாயக்க, சிறிலால் மத்தியு போன்ற மூன்று மிகவும் துவேசமான இனவாதிகள் இருந்திருக்கின்றார்கள். அந்த மூன்று இனவாதிகளையும் ஒன்று திரட்டி ஒரே ஆளாக நீங்கள் இருக்கின்றீர்கள். ஏனெனில் நீங்கள் தற்போது பேசும் போது சுற்றிவர இருந்தவர்களுக்கு முன்னுரிமை, நாங்கள் நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்றும் கூறுகின்றீர்கள். ஆனால், இந்த நாட்டிலே கடந்த காலங்களிலே நடைபெற்றவைகளுக்கு நீங்களும் முக்கிய காரணமாக இருந்திருக்கின்றீர்கள்.

எனவே, தொடர்புடைய அமைச்சரிடம் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால் ஏழாம் நூற்றாண்டிலே பாடல் பெற்ற இந்தத் திருக்கோணேஸ்வரம் முன்னூற்று நாற்பது ஏக்கர் பரப்பளவைக் கொண்டதை 1971ம் ஆண்டு தொல்பொருள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தாலும், பதினெட்டு ஏக்கருக்கு உட்பட்ட காணி கோயிலுக்குச் சொந்தமானதாக இருக்கின்றது. அந்தக் கோயில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். பாடல் பெற்ற தளம் இராஜகோபுரம் இல்லாமல் இருக்கின்றது. அதற்கான இராஜகோபுரம் அமைக்க வேண்டும்.

வெளிநாடுகளில் இரந்து இங்கு சுற்றுலாவிற்கு வருபவர்கள் இந்த நாடடைப் பற்றிப் படித்து விட்டுத்தான் வருகின்றார்கள். இந்த நாட்டிலே சோழர் பல்லவ காலத்து ஆட்சியைப் பற்றி அறிந்து விட்டுத்தான் வருகின்றார்கள். அவர்கள் திருக்கோணேஸ்வரத்திற்குச் செல்லும் போது வழியிலே கடைகளை வைத்து இந்து சமயத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வழிபடுவதற்கும், ஆராய்வதற்கும், சுற்றலாப் பயணிகள் மேலும், மேலும் வருவதற்கும் ஆவனசெய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

# ஈரானில் சூடு பிடித்துள்ள ஹிஜாப் விவகாரம்




அப்ரா அன்சார்





சுமார் 8 மில்லியன் மக்கள் சனத்தொகையில் 4 மில்லியன் பெண்கள் வாழக்கூடிய ஒரு மத்திய கிழக்கு நாடாக ஈரான் விளங்குகிறது. பூகோள ரீதியிலும், மத ரீதியில் மற்றும் அரச சார்பு ரீதியிலும் இஸ்லாம் மார்க்கத்துடன் பின்னிப்பிணைந்த நாடக உள்ளது. 1979க்கு முன்னரான காலப்பகுதியில் அனாச்சாரங்கள் பல்கிப்பெருகி, பல சமூக சீர்கேடுகள் நிறைந்த நாடாக ஈரான் காணப்பட்டது. அக் காலப்பகுதியில் பலர் நாட்டை விட்டு வெளியேறினர். அக் காலப்பகுதியில் இவை கிளர்ச்சியாக வெடித்து இறுதியில் 1979ம் ஆண்டு இஸ்லாமிய புரட்சி எனும் மாபெரும் சம்பவம் நிகழ்ந்தது. இதனைத் தொடந்து பல்வேறுபட்ட துறைகளில் ,பல்வேறு மாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டன. அப்போது மத ரீதியில் கடுமையான சட்டங்கள் அமுலாக தொடங்கியதை வரலாறு எடுத்துக் காட்டகின்றது.

**தற்போதைய ஈரான் பிரச்சினை!**

மஹ்ஸா அமினி எனும் 22 வயதுடைய ஈரானிய யுவதி, குர்திஸ்தான் மாகாணத்தின் சக்கஸ் எனும் தனது ஊரிலிருந்து தலைநகர் தெஹ்ரான் நோக்கி தனது குடும்பத்தினருடன் சென்றிருந்தாள். சிறுவயதிலிருந்தே அதாவது குறிப்பாக ஐந்து வயதிலிருந்து தனது தலையில் பல சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டிருந்தாலும் தொடர்ந்தேர்ச்சியான சத்திரசிகிச்சை காரணமாக அவள் அன்றைய தினம் சரியாக தனது ஹிஜாபை அணியாமல் கொஞ்சம் தளர்த்தி அணிந்திருந்த காரணமாக ஈரானிய அற நெறி காவல் துறையினால் (Islamic Moral Police) கடந்த வாரம் செப்டம்பர் 13 அன்று ஈரான் தலைநகர் தெஹ்ரானில் வைத்து கைது செய்யப்பட்டார்.

அவ் அற நெறி காவல் துறையானது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டதும், மார்க்க ரீதியான கண்காணிப்புகளை மேற்கொள்ளும் ஒரு அமைப்பாகும். பெண்களில் ஹிஜாப் முறையாக அணியாமல் இருப்பவர்கள், அரைகுறை ஆடைகள் அணிபவர்கள், ஆடைகளை இறுக்கமாக அணிபவர்கள் என பல்வேறு மார்க்க ரீதியான கண் காணிப்புகளை மேற்கொண்டு தவறு செய்பவர்களை கைது செய்கின்றனர். இவர்களால் கைது செய்யப்பட்டவர்கள் மார்க்க வகுப்புகளுக்கு உட்படுத்தப் படுவதோடு சில வேளைகளில் உச்ச கட்டமாக 2 வருட சிறை வாசகத்தையும் அவர்களுக்கு தண்டனையாக வழங்கு கின்றனர். இந்த செயன்முறையை பலர் வரவேற்றாலும் இன்னும் சிலரால் இந்த செயற்பாடு விமர்சனங் களுக்கும், எதிர்ப்புக் களுக்கும் உள்ளாகியுள்ளது.

கடந்த வாரம் செப்டம்பர் 13 கைது செய்யப்பட்ட அமினி 3 நாட்கள் கோமா நிலையில் இருந்து, வைத்திய சாலையில் செப்டம்பர் 16ம் திகதி உயிரிழந்தார். ஈரான் அரச தரப்பு தகவல்களின் படி ,குறித்த யுவதி மாரடைப்பினால் காலம் சென்றார் எனவும் தெறிவித்த நிலையில் அதனை அவளின் குடும்பத்தினர் அதனை ஏற்க மறுத்து அப் பெண் காவலர்களால் தாக்கப்பட்டிருக்கிறாள் அதன் காரணமாகவே அவள் இறந்தால் என போராடி வருகின்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை ஈரானிய அரசுக்கு அமினி தாக்கப்பட்டதுக்கான ஆதாரங்கள் தங்களிடம் இருப்பதாகவும் பக்க சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. அமினியின் சர்ச்சைக்குரிய இந்த மரணத்தை தொடர்ந்து நாடு பூராகவும் பல கலவரங்கள் கொதித்து எழுந்துள்ளது .

இது பற்றி சர்வேதேச ஊடகங்கள் செய்தி வெளியிடுகையில், ஈரானில் 2009ம் ஆண்டுக்கு பின்னரான மாபெரும் போராட்டமாக இது அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களில் குறிப்பாக பெண்கள் காணொளிகளின் முன் தனது முடிகளை வெட்டி நூதன போராட்டம் ஒன்றை கொண்டுசெல்வதையும் சமூக ஊடகங்களில் காணமுடிகின்றது. இவை ஒரு பக்கம் இருக்க பல பெண்களும் கடுமையான சட்டம் அமுலில் இருக்கும் வேளையிலும் ஆர்ப்பாட்ட களத்தில் தங்கள் ஹிஜாப்களை கழட்டி காவல் துறையை எதிர்த்து போராடி வருகின்றனர். இந்த போராட்டங்களால் இதுவரையில் சுமார் 31 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகமான அல்ஜெஸீரா செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச அரங்கில் பல நாடுகளில் ஹிஜாபிற்கு எதிரான போராட்டங்கள் இடம்பெற்றுள்ளதை கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றது.

அதாவது கடந்த 2009 ஆண்டு தொடக்கம் இன்று வரை இலங்கையில் காலத்துக்கு காலம் முஸ்லிம் பெண்களின் ஆடைகளுக்கு எச்சரிக்கை விடப்படுகின்றது,இந்த வருடத்தின் ஆரம்பத்தில் (ஜனவரி மாதம்) இந்தியாவின் கர்நாடகாவில் முஸ்லிம் பெண்களின் பர்தாவுக்கு எதிரான பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது .அதே போன்று திருகோணமலை சன்முகா பாடசாலை ஆசிரியைக்கு அபாயா அணிந்து வர முடியாது போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது.இது மாத்திரமன்றி உலகின் பல நாடுகளில் முஸ்லிம் பெண்கள் ஆடை விவகாரத்தில் பல்வேறு சிக்கல்களை முகம்கொடுத்து வருகின்றனர்.

பல நாடுகள் முஸ்லிம் பெண்களின் ஆடைகளுக்கு எதிராக செயற்படுவதை போன்று மேலும் சில நாடுகள் முஸ்லிம் பெண்களின் ஆடை முறை இவ்வாறு இருக்க வேண்டும் என்ற கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கின்றது.இதில் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் குறிப்பாக உள்ளது.

ஏன் சர்வதேசமே இவ்வாறு முஸ்லிம்களின் விடயத்தில் கொதித்து எழுகின்றதோடு, முஸ்லிம் பெண்களின் ஆடை முறை ஏனையவர்களுக்கு சிக்கலானதா என்ற சந்தகே கேள்வி உங்களுக்கு தோன்றலாம்.ஆடை என்பது மதரீதியான பார்வைக்கு அப்பால் அனைவருக்கும் சுதந்திரம் உண்டு என்பதே நிதர்சனம்.இவ்வாறான பிரச்சினைகளுக்கு பின்னால் தூ ண்டல்கள் இருக்கலாம் என்பது கேள்விக்குறி எனினும் சர்வதேச அரங்கில் அரங்கேற்றப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு பின்னால் மறைமுகமாக ஒரு தீயசக்தி தொழிற்படுகின்றது என்பது தெளிவானது.எனவே எந்த விவகாரத்தையும் மதத்துடன் இணைக்காது பொதுப்படையாக அவதானிக்க வேண்டும் என்பதே இங்கு முக்கியம்.

# டிப்ளோமா கற்கைநெறி முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு





கல்வி மேம்பாட்டு பேரவையில் டிப்ளோமா கற்கைநெறியினை முடித்தவர்களுக்கு வைபவரீதியாக சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கொழும்பு ரமதா ஹோட்டலில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த் குமார் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக கொழும்பு தேசிய கண் வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக், Sunrise industries (Pvd) Ltd பணிப்பாளர் Mz. ஹம்ஸா ஆகியோரும் அதிதியாக உலமா கட்சி தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீட் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வு கல்வி மேம்பாட்டு பேரவை பணிப்பாளர் மருதூர் ஏ.ஹஸ ன் தலைமையின் இடம்பெற்றது.

**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடையோர் 075 40 10 238 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

NEWS PLUS

# பாலிகா தேசிய பாடசாலைக்கு ஓட்டமாவடி தேசிய பாடசாலை OCC 90 அமைப்பால் உதவி





(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

ஓட்டமாவடி பாத்திமா பாலிகா தேசிய பாடசாலைக்கு ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் 90ம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் அமைப்பினால் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது.

ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் 90ம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் அமைப்பிடம் ஓட்டமாவடி பாத்திமா பாலிகா பாடசாலை நிருவாகத்தினால் பாடசாலையின் வகுப்பறை புனரமைப்பு செய்யப்படாமல் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்பட்டு வரும் நிலையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கை வகுப்பறையின் கீழ் தரையை புனரமைப்பு செய்ய சீமெந்து பக்கட்டுகளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த நிலையில் ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் 90ம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் அமைப்பினால் உடனடியாக வகுப்பறையின் கீழ் தரையை புனரமைப்பு செய்ய இருபது சீமெந்து பக்கட்டுகளை பாடசாலை அதிபரிடம் வழங்கி வைத்தனர்.

மாணவர்கள் அமைப்பின் தலைவர் சரீப் றபியூடீன் தலைமையில் சீமெந்து பக்கட்டுக்களை கையளிக்கும் நிகழ்வில் பாடசாலை அதிபர் ஏ.எல்.அபூலஹசன், மாணவர்கள் அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஓட்டமாவடி மத்திய கல்லூ ரியின் 90ம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் அமைப்பினல் வறிய நிலையில் காணப்படும் மக்களின் தேசைகளை கண்டறிந்து மின்சாரம் வழங்கல், குடிநீர் திட்டம் மேற்கொள்ளல், கல்வி நடவடிக்கைக்கு உதவி செய்தல் போன்ற வேலைத் திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதாக அமைப்பின் செயலாளர் அர்.எம்.புஹாரி தெரிவித்தார்.

# விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு

(எச்.எம்.எம்.பர்ஸான்)

மீராவோடை அல் ஹிதாயா தேசிய பாடசாலைக்கு சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிழக்கிலங்கை தன்னம்பிக்கை சமூக எழுச்சி நிறுவனத்தினால் (நுளுஊமு) வுநயஅ ஙி செயற்பாட்டுக்காக இது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

உபகரணங்களை நிறுவன பிரதிநிதியிடமிருந்து அதிபர் கே.எல்.எம்.சபாஹிர், உடற்கல்வி ஆசிரியர் றினோஸ் மற்றும் சிரேஷ்ட ஆசிரியை திருமதி பீ.எம்.. கலீல், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான டபள்பூ.எம். சிபான், வீ.ரீ. றிகாஸ் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

